
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 ஜூன் - 2001 இதழ் - 6



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபையார்,

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

© 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப் படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

*தபால் பெட்டி எண் 27,*

**காங்கயம் - 638 701. இந்தியா**

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | கிறிஸ்துவின் இரண்டாம் வருகை | 09 |
| 3. | பெண்கள் பகுதி | 12 |
| 4. | வாலிபர் பகுதி | 15 |
| 5. | எஸ்றா ஒரு கண்ணோட்டம் | 18 |
| 6. | வெளிப்படுத்தின விசேஷம் | 19 |
| 7. | சிறுவர் பகுதி | 25 |
| 9. | வேதாகம கேள்வி - பதில் | 27 |
| 10. | ஜெபத்திலும் திருமறை கூறும்... | 29 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor**
***S. RAJANAYAGAM***

**Honorary Editor**
***J.C. CHOATE***

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .14 June - 2001 Issue - 6**


*ஆசிரியவுரை*

# எலும்பிடமிருந்து ...

இத்தலைப்பைப் பார்த்த மாத்திரத்தில், ஏதோ எழுத்துப் பிழை ஏற்பட்டுவிட்டதோ என்று எண்ணத் தோன்றும். எலும்பைக் கொண்டு எதை எடுத்துக் கூறமுடியும் என சிந்திக்கவும் தூண்டும். சிறிய ஜந்துவாகிய எறும்பிடமிருந்தாகிலும் ஞானத்தைக் கற்றுக்கொள்ளமுடியும் என்று நீதிமொழிகள் கூறுகிறது. (நீதி.6:6-8;30:24). ஆனால், எலும்பைக் கொண்டு எதுவும் கற்றுக்கொள்ளமுடியும் என்று எங்குமே இல்லையே என்று நீங்கள் இன்னும் யோசிக்கக் கூடும். பரிசுத்த வேதாகமம் எலும்பைக் கொண்டு, இதைக் கற்றுக்கொள்ளுங்கள், அதை கற்றுக்கொள்ளுங்கள் என்று நேரிடையாகக் கூறாவிட்டாலும், எலும்பின் மூலமாக நாம் சில பாடங்களை கற்றுக்கொள்ளும் வாய்ப்பைத் தந்தே இருக்கிறது.

பரிசுத்த வேதாகமம் பல இடங்களில் எலும்புகள் பற்றிப் பேசியிருந்தாலும், நம்முடைய கவனத்தைக் கவர்ந்த எலும்பு '' யோசேப்பின் எலும்பு தான்'' இந்த யோசேப்பின் எலும்பைக் குறித்து நான் பேசுவதற்கு காரணம், அது வேதாகமத்தின் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதுதான். (ஆதி.50:25;யாத். 13:19; யோசு.24:32; எபி.11:22). நான் எலும்பு, எலும்பு என்று எழுதுவதால் ஏதோ , யோசேப்பின் எலும்பு, திடீரென எழும்பி, கழுதை வாயைத்திறந்து பேசியதுபோல் (எண்.22:28) யோசேப்பின் எலும்பு பேசப் போகிறதோ என்று தயவு செய்து நினைத்துக் கொள்ளாதீர்கள். நம்மைச் சுற்றிலுமுள்ள பல காரியங்களைக் கொண்டு நாம் பாடம் கற்றுக்கொள்கிறது போல, சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்ற, இந்த எலும்புக்குச் சொந்தகாரனுடைய வாழ்க்கையைக் கொண்டும் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம். அவ்வளவுதான்.

முதலில், யார் இந்த யோசேப்பு என்று தெரிந்து கொள்வோம். முற்பிதாக்களில் மூன்றாமவரான யாக்கோபின்,பல வருண அங்கிப் புதல்வன் தான் இந்த யோசேப்பு. தன்னால், மிகவும் நேசிக்கப்பட்ட மனைவிக்குப் பிறந்த முதல் மகன். பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்களில் பழுதேதும் இல்லாதவன். "தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்" என்று பெயரெடுத்த மோசே (எபி.3:5), "என் இருதயத்திற்கு ஏற்றதாசன்" (அப்.13:22) என்று அழைக்கப்பட்ட தாவீது போன்றவர்கள் கூட, தேவனோடு தாங்கள் கொண்டிருந்த உறவின் ஒரு கட்டத்தில் விரிசலுக்கு வாய்ப்பளித்து விட்டபோது, "தடுமாற்றம்" "தள்ளாட்டம்" என்ற வார்த்தைகளைத் தன்னருகே அண்ட விடாமல் வாழ்ந்த உத்தம புருஷன் இந்த யோசேப்பு. உதாரணமாக, ஒரு சமயம், இளைஞனாக இருந்த இவனிடம் தன்னுடைய எஜமானாகிய போர்த்திபாரின் மனைவி வலியவந்து பாவம் செய்ய வற்புறுத்திய போது, தன்னுடைய ஆடையை உதறித் தள்ளி ஓடிய ஒழுக்க சீலன் தான் இந்த யோசேப்பு.

பரிசுத்த வேதாகமம், வேறு யாருக்கும் தராத ஒரு சிறப்பை இவனுக்குத் தானமாகத் தந்திருக்கிறது. இச்சிறப்பில், இவனுக்கு நிகராக வேறு யாரையும் குறிப்பிட முடியாது. இயேசுவானவரின் வாழ்க்கையோடு, ஒப்பிட்டுப் பேசும் படியான வாழ்க்கை இவனுக்கு மாத்திரமே சொந்தம். ஆம், அவர்களிருவருக்கும் இடப்பட்ட பெயரிலிருந்து, அந்த ஒற்றுமை ஆரம்பமாகிறது. இருவருமே, "இரட்சிப்பு" என்ற ஒரே பொருளையுடைய பெயரைக் கொண்டவர்கள். இருவருமே தங்கள் தகப்பன்மார்களுக்கு மிகவும் பிரியமாயிருந்தவர்கள். இருவருமே, தங்கள் சகோதரர்களுக்கு உதவும்படியாக, தகப்பன்மார்களால் அனுப்பப்பட்டவர்கள். இருவருமே தங்கள் சகோதரர்களாலே, பகைக்கப்பட்டு, வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டவர்கள். இருவருமே, தங்களுக்குத் தீங்கிழைத்த சகோதரர்களுக்கு இரட்சகர்களாக மாறியவர்கள். இந்தளவு இயேசுவின் வாழ்க்கையோடு ஒப்பிடும் தகுதி வேறு யாருக்காகிலும் உண்டா?

சரி, இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த யோசேப்பு, தான் மரிப்பதற்கு முன்பாக, தன் சகோதரரை நோக்கி," தேவன் உங்களை சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக என்று சொல்லி யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான்" (ஆதி.20:25) என்றுள்ளது. ஒருவேளை, நம்முடைய பார்வையில், சொத்துப்போன மனிதனின் எலும்பு, ஓர் அற்பமான பொருளாக இருக்கலாம். ஆனால், அந்நாட்களில், வாழ்ந்த இஸ்ரவேலருடைய வாழ்க்கையில், அது அற்பமானதாகக் கருதப்படவில்லை. எப்படியெனில், தாங்கள் அடிமைகளாக, அடி உதைப்பட்டு அல்லப்படும் வாழ்க்கை வாழ்ந்தாலும், அந்த எலும்புகளை சுமார் 300 ஆண்டுகள் பாதுகாத்து வைத்திருந்தனர். அவசர கோலத்தில் எகிப்தை விட்டுப் புறப்பட்ட அந்த நேரத்தில் கூட எலும்புகளை மறவாமல் எடுத்து வந்திருந்திருக்கிறார்கள் (யாத்.13:19) இன்னும் அந்த எலும்புகளை உரிய இடத்திற்குக் கொண்டு வந்து, அதைப் பத்திரமாக அடக்கம் செய்திருக்கிறார்கள்...".(யோசு.24:32)

அன்றைய இஸ்ரவேலரின் இச்செயல்கள் நமக்கு ஓர் உண்மையை உணர்த்தவே செய்கிறது. நமக்கு அற்பமாகத் தெரிகின்ற எலும்பு, அவர்களுடைய பார்வையில் முக்கியமானதாகவே இருந்திருக்கிறது. எலும்பு என்னத்தைப் போதிக்கமுடியும் என்று நாம் கருதினாலும், இஸ்ரவேலர்கள் அதற்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தைப் பார்க்கும்போது, அதிலிருந்து அவர்கள் சில காரியங்களை கற்றுக்கொண்டதாகவே தெரிகிறது. ஆகவே நாமும், இந்த எலும்பை மையமாக வைத்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

## I. முதற்பாடம் – விசுவாசம்

யோசேப்பின் எலும்பைக் கொண்டு நாம் கற்றுக்கொள்ள முடிகின்ற முதற்பாடம் "விசுவாசம்".

விசுவாச விளக்காகத் திகழும் எபிரேயர் 11-ம் அதிகாரம் இவ்விதம் சொல்கிறது. ***"விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப் பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்புகளைக் குறித்து கட்டளை கொடுத்தான்".*** (11:22) இந்த வசனத்தைக் கவனித்தால், **"விசுவாசத்தினாலே"** தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இது, யோசேப்பு, தனது அந்திய காலத்தில் உணர்ச்சி வசப்பட்டுச் சொல்லிய வார்த்தைகள் அல்ல. மாறாக தேவன் மீது அவன் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசத்தின் வெளிப்பாடு இது. இன்னும், அவருடைய வாக்குத்தத்தத்தின் மீது அவன் கொண்டிருந்த நம்பிக்கையின் அடையாளம். அது மாத்திரமல்ல, தன்னுடைய பிதாக்களோடு, தானும் போய்ச் சேரவேண்டுமென்று அவன் கொண்டிருந்த ஆசையின் அறிகுறி.

யோசேப்பு கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் புத்திரர் செய்திருக்கிறார்கள். ஒருவேளை தலைமுறை மாறினாலும், யோசேப்பின் எலும்பைப் பற்றிய உண்மை மாறாமல் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. புதிய சந்ததியார் யோசேப்பின் எலும்பைப் பார்த்து, அதைக் குறித்து விசாரிக்கும் போதெல்லாம், ஓர் உண்மையைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அது "இந்த எகிப்து தேசம் நமக்குச் சொந்தம் அல்ல. தேவன் ஒரு நாளில் நம்மைச் சந்திப்பார். நிச்சயமாகவே நாம் எகிப்தை விட்டுப் புறப்படுவோம்" என்பதே அவ்வுண்மை. தேவனுடைய நேரடி வெளிப்பாடும், மோசேயின் பிரமாணங்களும் இல்லாத அந்தக் காலகட்டத்தில் தேவன் மீது நம்பிக்கை கொள்ள இந்த எலும்பு, கண்டிப்பாக அவர்களுக்கு உதவியிருக்க வாய்ப்புண்டு.

இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து அழைத்துவர மோசே தேவனால் அனுப்பப்பட்டது உண்மைதான் என்றாலும், அந்த மோசே, தன்னோடு யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு போனான் என்று எழுதியிருந்தாலும் (யாத்.13:19), மோசே தேவனால் அனுப்பப்பட்டு எகிப்துக்குப் போகும் வரை சுமார் 300 ஆண்டுகள் அந்த எலும்புகளைப் பாதுகாத்தது யார்? எந்த வெளிப்பாடும் தேவனிடத்திலிருந்து வராத அந்நாட்களில், அன்றாடங் காய்ச்சிகளாக

நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தவர்களுக்கு, என்ன விலை கொடுத்தாகிலும் அந்த எலும்புகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் எப்படி வந்தது? சந்ததி மாறினாலும், சங்கதியில் மாறாமல் இருந்திருக்கிறார்களே அது எப்படி? ஏதாவது ஊகிக்க முடிகிறதா? ஒருவேளை யோசேப்பின் எலும்பு அவர்களின் செயல்பாட்டிக்குக் காரணமாக இருந்திருக்க முடியும். ஆம், அவர்களின் நம்பிக் கைக்கு அடிகோலியாக அந்த எலும்பு இருந்திருக்கக் கூடும். அதைப் பார்க்கும் போதெல்லாம், எலும்பின் பின்னணி பற்றி விசாரிக்கும் போதெல்லாம் அவர்க ளுக்கு தேவன் மீது விசுவாசம் வந்திருக்க வாய்ப்பு அதிகமாகவே உண்டு.

இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளையே! ஏதாவது விளங்குகிறதா? நமது விசுவாச நிலையை இந்தச் சந்தர்ப்பத்தோடு ஒப்பிட்டு பார்க்க முடிகிறதா? உயிரற்ற எலும்பு, அன்றைக்கு நம்பிக்கையையும், விசுவாச த்தையும் ஊட்டியிருக்கிறதே, அப்படி ஊட்ட அவர்கள் அனுமதித்திருக்கிறார்களே, அப்படியானால் நம்முடைய நிலை எப்படி? இன்றைக்கு நம்மிடம் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகள் உண்டே. அவர்களின் வாழ்க்கையில் எந்த நன்மையும் செய்ய முடியாத எலும்பு, அவர்களின் வாழ்க்கையில், விசுவாசத்தை வளர்த்திருக்கிற தென்று சொன்னால், நம்முடைய வழிகளைச் செவ்வைப்படுத்தி (சங்.119:105) நம்மை மறுபிறப்படையச் செய்து (1.தீமோ.1:25), நம்மை ஆசீர்வதித்து (வெளி.1:3), நம்மை நித்தியத்திற்கு வழிநடத்தும் ஜீவனுள்ள தேவ வார்த்தைகள், நம்மில் எந்தளவு விசுவாசத்தை வளர்க்க வேண்டுமென்று யோசித்துப்பாருங்கள். ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமா யிருப்பது கூடாத காரியம்'' (எபி.11:6). ஒருவேளை விசுவாசம் வளராத நிலையிருப் போமானால், நாம் தேவனுக்கு மிக அதிகமாகக் கணக்கு கொடுக்க வேண்டு மென்பதை உணர்ந்துவ விசுவாச வாழ்க்கையில் முனைப்பு காட்டுவோமாக.

## II. இரண்டாம் பாடம் – மன்னிப்பு:

பரிசுத்த வேதாகமத்தில் பரவலாகப் பேசப்பட்டிருக்கும் யோசேப்பின் எலும்பு மூலமாக நாம் கற்றுக்கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம் மன்னிப்பு.

யோசேப்பு தன் அந்திய காலத்தில் கொடுத்த கட்டளையை, அதாவது தன்னுடைய எலும்பைப் பற்றிக்கொடுத்த கட்டளையை, அட்சரம் பிசகாமல் அவர்கள் நிறைவேற்றினதற்கான காரணங்களுள் ஒன்று, அவன் மீது அவர்களுக் கிருந்த மரியாதை. ஒருவன் மீது மற்றவர்களுக்கு மரியாதை எப்படி வரும்? சம்பந்தப்பட்டவன், அவர்களுக்கு நேரிடையாக ஏதாவது நன்மை செய்திருக்க வேண்டும் அல்லது அவர்கள் மதிக்கத்தக்க ஓர் உன்னத வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும். சரி, யோசேப்பின், காலத்தில் வாழ்ந்தவர்கள் வேண்டுமானால், அவனிடத்திலிருந்து நேரிடையான நன்மைகளைப் பெற வாய்ப்பிருந்தது. ஆனால் அவனிடத்தில் எந்த நன்மையும் பெறாத அவனுக்கு பின் வாழ்ந்த இரண்டு, மூன்று சந்ததியாரும் அவன் மீது மரியாதை வைத்து, அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தி ருக்கிறார்களே அது எப்படி? எப்படி? கண்டிப்பாக, அவனுடைய வாழ்க்கை பற்றி

அவர்கள் கேட்டறிந்ததன் மூலமாகத்தான் இருக்க முடியும். வேறு வழியிருக்க நியாயமில்லை. அப்படி அவன் பற்றி முழுமையாகக் கேள்விப்பட்டு, அதனடிப்படையில் அவன் மீது மரியாதை கொண்டு வாழ்ந்த மக்கள், எப்பொழுதெல்லாம். யோசேப்பின் எலும்புகளைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றார்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் நெஞ்சில் நெடிதுயர்ந்து நின்றிருக்கக் கூடிய காரியம், யோசேப்பின் மன்னிப்பின் குணமாகவே இருந்திருக்க வேண்டும்.

அப்படி அவன் யாரை மன்னித்தான் என்று கேட்கிறீர்களா? உங்களுக்கே நன்றாகத் தெரியும். எதற்கும் ஓரளவு சொல்லுகிறேன்.

தன் தகப்பனுக்குப் பிரிய மகனாக, ஏகபோக செல்வாக்கோடு வளர்ந்து வந்த, யோசேப்பு,சதிகார சகோதரர்களால் கொடுமையாக நடத்தப்பட்டு, ரூபனின் தயவால் படுகுழியில் தள்ளப்பட்டு, யூதாவின் புண்ணியத்தால் மீதியானியரின் கையில் விற்கப்பட்டு, எகிப்துக்கு ஒருவழியாய் போய் சேர்ந்தான். அங்கு அப்பாடா என்று போர்த்திபாரின் வீட்டு விசாரணைக்காரனாக இருந்தபோது, வெறிகொண்ட தன் எஜமானியால் பொய்ப்பழி சுமத்தப்பட்டு சிறைச்சாலையில் தள்ளப்படுகிறான். இப்படி அவன் சிறைச்சாலையில் போதுமான அவகாசத்துடன் தன் நாட்களைக் கழித்த போது, அவனுடைய எண்ணங்களெல்லாம் எப்படியிருந்திக்குமென்று எண்ணி பாருங்கள். அப்படியே,பின்னோக்கிச் சென்றிருக்கும். தான் இந்த இடத்திற்கு வந்து சேர்ந்ததற்கான அடிப்படை என்னவென்று சிந்தித்திருப்பான்.

அப்பொழுது அவனுடைய எரிச்சலெல்லாம் யார்மீது திரும்பியிருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? ஒருவேளை சிறைவாசத்துக்கான காரணம் போர்த்திபாரின் மனைவியாக இருந்தாலும், இதற்கெல்லாம் வித்திட்டவர்கள், தன் சகோதரர்கள் தானே என்று அவர்கள் பக்கமே அவன் பார்வைபோயிருக்கும். நாமாக, இருந்திருந்தால், அச்சமயத்தில் என்ன எண்ணியிருப்போம்? எப்படி நினைத்திருப்போம்? என்றாவது ஒரு நாள் வரும், அப்பொழுது அவர்களைப் பழிவாங்காமல் விடமாட்டேன் என்று ஒரு சபதத்தை மேற்கொண்டிருப்போம். இன்னும், அந்தநாள் எப்பொழுது வருமென்று ஆவலோடு காத்திருந்திருப்போம். அப்படித்தானே?

ஆனால், இந்த யோசேப்பு என்ன செய்தான் தெரியுமா? கானானில் ஏற்பட்ட கடும்பஞ்சத்தின் காரணமாக, தானியம் கொள்ள,யாக்கோபின் புத்திரர் எகிப்துக்கு வந்தபோது, அங்கே அதிபதிக்கு அடுத்த ஸ்தானத்திலிருந்த சொப்பனக்காரனாகிய யோசேப்பை வணங்கி, தங்கள் குடும்பம் பற்றிய சில தகவல்களைச் சொன்னார்கள். அப்பொழுது, **"ஒருவன் காணாமற்போனான்"** (ஆதி.42:13) என்று யோசேப்பிடமே சொல்கிறார்கள். நானும், நீங்களும் ஒருவேளை அந்த இடத்தில் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? ஏன்டா, என்னிடமே கதை சொல்கிறீர்களா என்று முன் நடந்தவைகளை விபரமாக விளக்கி, நெஞ்சு நோகத் திட்டித்தீர்த்து, ஓடிப்போய் விடுங்கள் என்று விரட்டியிருப்போம். ஆனால், இவன் அப்படியெல்லாம் எதுவுமே செய்யவில்லை.

தொடர்ந்து நடந்த வேறொரு உரையாடலின் அடுத்த கட்டமாக, தாங்கள் யோசேப்புக்குச் செய்த துரோகமே நம்மை இவ்விதம் அலைக்கழிக்கிறது. (42:21,22) என்று தங்களுக்குள்ளாக அவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டு அதற்குமேல் தன்னுடைய பாசத்தை அடக்கிகொள்ளமுடியாத யோசேப்பு தனிமையில் போய் அழுகிறான். (42:24)பிறகு, தனக்கு முன்பாக பயந்து நடுங்கி uÕÇ Â Ê ¢x £o ¢x öPÕs h \÷PÕµ°Pø Í ÷{ÕÜQ, ***"நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக முடியப் பண்ணினார்"***என்றான் (50:20).

அருமையான தேவனுடைய பிள்ளையே, மேற்சொன்ன பகுதியெல்லாம், யோசேப்பின் மன்னிக்கும் பண்பை பளிச்செனக் காட்டுகிறதா இல்லையா? யோசேப்பின் செயல்பாட்டை முதல் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் சம்பவத்தோடு, ஓரளவு ஒப்பிடலாம் தானே. ஆம், மூர்க்க வெறிக் கொண்டு, தன்னைக் கொல்லவதற்குக் கல்லெறிந்தவர்களைப் பார்த்து, "ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று சொன்னான். (அப்.7:60) கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்றிருந்த மோசேயின் காலத்துக்கு முந்தின காலத்திலேயே, எப்படியொரு மன்னிக்கும் குணாதிசயம் இந்த யோசேப்புக்கு இருந்திருக்கிறதென்று எண்ணிப்பாருங்கள்.

அன்பானவர்களே, மன்னிக்கும் சுபாவத்தில் நாம் எங்கே நிற்கிறோம்? நாம் மன்னிக்கும் குணம் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பது வேதத்ததின் போதனை, தேவனுடைய எதிர்பார்ப்பு.நம்முடைய சகோதரர்கள் நமக்கு விரோதமாகச் செய்கின்ற காரியங்களை நாம் மன்னிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். இது காரியமாக, நமது இரட்சகர் சொல்லியுள்ள கருத்தைக கவனியுங்கள். " நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியமாற் போனால், என்பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" (மத்.18:35) நமதாண்வரின் போதனையும், யோசேப்பின் எலும்பு தரும் பாடமும் ஒன்றுதான். ஆகவே நாம் மன்னிக்கும் குணம் பெருகியிருக்கிறவர்களாக இருப்பது அவசியம்.

## III .மூன்றாம் பாடம் – தேவன் சொன்னது நடக்கும்

யோசேப்பின் எலும்பின் மூலமாக, நாம் கற்றுக்கொள்ள முடிகிற மூன்றாவது பாடம். தேவன் சொன்னது எதுவோ அது நடக்கும் என்பது.

பொய் சொல்ல தேவன் ஒரு மனிதரல்ல. மனம் மாற அவர் மாந்தர் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? (எண்.23:19)என்றவசனத்தையெல் லாம் நாம் அறிந்திருக்கிறோம். யோசேப்பின் எலும்பு விஷயத்தில் கூட தேவன் என்ன சொன்னாரோ அது அப்படியே நடந்திருக்கிறது. வேதவாக்கி யங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளுப்பட்டிருக்கிறபடியால் (2.தீமோ.3:16)

வேதாகமத்தின் அனைத்து வார்த்தைகளும் தேவனுடைய வார்த்தைகளே. அது யார் மூலமாக பேசப்பட்டிருந்தாலும் அவை தேவனுடைய வார்த்தையே. இது உண்மையானால், தன்னுடைய எலும்பைக் குறித்து யோசேப்பு பேசிய வார்த்தைகள், தேவனுடைய வார்த்தைகளே. அந்த வார்த்தைகள் என்ன சொல்கிறதென்று மீண்டும் கவனியுங்கள்''. ''யோசேப்பு தன் சகோதரரை நோக்கி; நான் மரணமடையப் போகிறேன். ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாகச் சந்தித்து நீங்கள் இந்த தேசத்தை விட்டு தாம் ஆபிரகாமுக்கும்,ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் ஆணையிட்டு கொடுத்திருக்கிற தேசத்துக்குப்போகப் பண்ணுவார். தேவன் உங்களை சந்திக்கும் போது என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக என்றான்'' (ஆதி.50:24,25).

தேவன் நிச்சயமாக, வாக்குத்தத்தம் பண்ணின தேசத்துக்கு அழைத்துச் செல்வார் என்று, யோசேப்பு முதலாவது நம்பினான். பிறகு, தன்னுடைய எலும்பைப் பற்றி இஸ்ரவேலரிடத்தில் பேசி அதன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையூட்டினான். தன்னுடைய எலும்புகளைக் குறித்து,இஸ்ரவேலரிடத்தில் அவன் ஆணையிடு வித்து கொண்டதினாலே அவர்கள் குடியிருக்கிற எகிப்துதேசம் அவர்களுக்கு சொந்தமல்ல என்ற கருத்தை அழுத்தமாகவும், ஆழமாகவும் அவர்கள் மனதில் பதிய விட்டான். ஆகவே, அவர்கள் எப்பொழுதெல்லாம் யோசேப்பின் எலும்பைப் பார்த்தார்களோ அப்பொழுதெல்லாம் ***தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறியே தீரும்*** என்று நம்ப வாய்ப்பு கிடைத்தது.

வாக்குமாறாத நம்முடைய தேவன் ஒருவேளை ஆண்டுகள் முந்நூறு உருண்டோடியிருந்தாலும், சந்ததிகள் சில கடந்து போயிருந்தாலும் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைக்கவே நினைத்து, மோசேயைக் கொண்டு யோசேப்பு ஆணையிடுவித்து கொண்டபடியே நிறைவேற்றினார்.

எனக்கருமையான வாசக அன்பர்களே, உயிரற்ற யோசேப்பின் எலும்பைப் பார்த்த போதெல்லாம், இந்த எகிப்து நமக்குச் சொந்தமல்ல, தேவன் ஒரு நாளிலே வாக்குத்தத்தம் செய்த கானானுக்கு கொண்டு போவார் என்று எண்ணியதைப்போல ஜீவனுள்ள வார்த்தைகளைப் பெற்றிருக்கும் நாம், இந்தப் பூமி நமக்குச்சொந்தமல்ல என்று நினைக்கிறோமா?அப்போஸ்தலர் பவுல் பிலிப்பியருக்கு சொல்லும் போது ***''நம்முடைய குடியிருப்போ, பரலோகத்திலிருக்கிறது அங்கேயிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்ற இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ''*** (பிலி.3:20) என்றல்லவா சொல்லுகிறார். நாம் இந்த பூமி நிரந்தரம் என்று இன்னும் நினைத்துக் கொண்டிருப்போமானால் நாம் தேவனுடைய வார்த்தைகளை அவமாக்குகிறவர்களாகவே இருப்போம். அவருடைய வாக்குத்தத்தின் மீது நம்பிக்கையற்றவர்களாகவே இருப்போம்.

இன்றைக்கு அநேகர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும் எண்ணமற்றவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலர், அது இருக்குமா என்று சந்தேகம் கூட படுகின்றனர். முதல் நுற்றாண்டில் இப்படிப்பட்ட எண்ணங் கொண்டிருந்தவர்களுக்குத் தேவன் பேதுருவைக்கொண்டு இவ்விதம் பதிலளித்தார். ''**தாமதிக்கிறார்**'' என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமை யுள்ளவர்களாயிருக்கிறார்'' (2.பேதுரு 3:9) இன்னும் ***''அன்றியும் ஒரே தரம் மரிப்பதும்,பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக் கிறது*** (எபி.9:27) என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், கிறிஸ்துவின் வருகை நிச்சயமானது. இதில் ஊசியின் முனையளவும் சந்தேகம் வேண்டாம்.

முந்நூறு ஆண்டுகள் கழித்து இஸ்ரவேலை விசாரித்த வாக்குமாறாத நமது தேவன், ஆண்டுகள் எத்தனை ஆனாலும், தம்முடைய குமாரன் மூலமாக நம்மை ஒரு நாளில் நியாயந்தீர்ப்பார். 300 ஆண்டுகள் கழித்து இஸ்ரவேலை கானானுக்கு அழைத்து சென்ற நமது தேவன், தமது குமாரன் மூலமாக அவருக்குப் பயந்து அவருடைய வசனங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறவர்களை, புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு ஒப்புக்கொடுத்து, ஒன்றான மெய் சபையில் அங்கம் வகிப்ப வர்களை நிச்சயமாக பரம கானானுக்குள் அழைத்துச் செல்வார். ஆகவே நாம் யாரும் அந்த பாக்கியத்தை இழந்து போக வேண்டாமென்று பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பத்தில் அற்பமாகக் கருதப்பட்ட எலும்பின் மூலமாக நாம் கற்றுக்கொண்ட பாடம் பயனுள்ளதாக இருந்திருக்குமென நம்புகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**E.Z.S. ராஜ நாயகம்**

## *வேதாகமம் சபைக்கு தரும் பெயர்கள்*

1. அழைக்கப்பட்டவர்களின் கூட்டம்
2. இராஜ்ஜியம்
3. தேவனுடைய வீடு
4. கிறிஸ்துவின் சரீரம்
5. தேவனுடைய ஆலயம்
6. பரிசுத்த ஜாதி, ராஜரீக ஆசாரியக் கூட்டம்

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

கிறிஸ்து ஒரு முறை வந்தார். ஆனால் அவர் மறுபடியும் வருகிறார். அவர் கடந்த காலத்தில் ஒரு முறை வந்தார். இப்பொழுது எதிர்காலத்தில் மறுபடியும் வருவார். கடந்த முறை அவர் மாம்சத்திலே வந்தார். ஆனால் அடுத்த முறை அவர் மகிமைபெற்ற கர்த்தராக வருவார். மனிதனை இரட்சிக்கும்படி முன்பு அவர் வந்தார். ஆனால் அடுத்த முறை அவர் மனிதர்களின் நியாயாதிபதியாக வருவார். அவர் சென்றது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக அவர் வருவார்.

கர்த்தர் தமது சீஷர்களை விட்டு செல்வதற்கு முன்பாக அவர்களிடத்தில் அவர் ''நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்'' என்றார் (யோவா.14:3). கர்த்தர் பரமேறிச் சென்ற நாளிலே, ''இவைகளை அவர் சொன்னபின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது, அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்கள் அருகே நின்று கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசு எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்''. (அப்.1:11) என்று வசனம் சொல்லுகிறது.

கிறிஸ்து மறுபடியும் ஒருநாள் வந்து எருசலேமில் தமது சீஷர்களுடன் ஆயிரம் வருடங்களுக்கு ஆளுகை செய்வார் என்று போதிக்கின்றனர். ஆனால் வேதம் அப்படி போதிப்பதில்லை. அப்போஸ்தலர்1-ம் அதிகாரத்தில் நாம் பார்த்தபடி கர்த்தர் தாம் (பரமேறி) சென்ற பிரகாரம் மீண்டும் ஒருநாள் வருவார். ஆனால் எருசலேமில் அவர் கால் வைப்பார் என்று வசனம் எந்த இடத்திலும் போதிப்பதில்லை.மாறாக, கிறிஸ்து மேகத்தில் வருவார் என்றும், மேகத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை ஆகாயத்திலே சந்திப்போம் என்று வசனம் போதிக்கிறது. ''அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்த பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம்'' அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரே கொண்டு வருவார். கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில்

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடி ருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேலே அவர்களோட கூட எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்''.(1.தெச.4:13-18).

கிறிஸ்து மறுபடியும் எப்பொழுது வருவார்? அநேகர் கர்த்தரின் இரண்டாம் வருகையைக் குறித்து முன்னுரைக்கிறார்கள். வேதத்தில் கர்த்தருடைய வருகை அடையாளமாக அல்லது உருவக மொழியில் கூறப்பட்டுள்ளது. எனவே அதன் இரகசியத்தை நாங்கள் அறிந்திருக்கிறபடியால் அதை உலகிற்கு இப்பொழுது வெளிப்படுத்துகிறோம் என்று சிலர் கூறுவர். இந்த மக்களெல்லாம் தங்களை முட்டாள்களாக்கிக் கொள்கிறார்களேயன்றி வேறல்ல. இன்ன காலத்தில் (நேரத்தில்) கர்த்தர் வருவார் என்று கூறுகிற கட்டமும் இருக்கிறது. அவர்களும் தேவதூஷணம் பேசக்கூடியவர்கள் என்பதைக் காட்டுகின்றனர். இதற்கிடையில் இவர்கள் சிலருடைய கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்ப அவர்களையும் வஞ்சிப்பார்கள். ஆனால் கர்த்தருடைய வருகையின் நேரத்தைக் குறித்து அறிந்திருக்கிற மனிதன் பூமியிலே ஒருவனும் கிடையாது. இப்படிப்பட்ட வார்த்தைகளை நாம் ஏன் கூற வேண்டும்? ஏனெனில் கிறிஸ்து தாமே பேசும்போது, ''அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவரைத் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்கள் அறியார்கள்''. என்றார். (மத்.24:36) தேவதூதர்களும் அறியாமல், கிறிஸ்துவும் கூட அறியாமல், தேவன் மாத்திரம் அதை அறிந்திருப்பாரேயாகில், பிறகு நானோ அல்லது வேறு எந்த மனிதனோ மாத்திரம் எப்படி அறிந்திருக்கக் கூடும். நம்மால் அறிய முடியாது.

கிறிஸ்துவின் வருகை திருடனைப் போல இருக்கும் என்று சொல்லப் பட்டுள்ளது. அவரை திருடனாக கூறவில்லை. அவருடைய வருகை திருடன் வருகையைப் போல இருக்கும். இதன் பொருள் அவர் முன்னறிவிப்பில்லாத நேரத்தில் வருவார் என்பதே. கவனியுங்கள். இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதான மும்,சௌக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, கர்ப்பவதியான வளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சடிதியாய் அவர்கள் மேல்வரும், அவர்கள் தப்பிப்போவதில்லை. சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களை சடிதியாய் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக் கிறவர்களல்லவே'' (1.தெச.5:2-4).


கர்த்தருடைய இரண்டாம் தோற்றத்தைக் குறித்து வேறு சிலக் காரியங் களையும் நாம் அறிகிறோம். உதாரணமாக, எல்லாரும் அவரைக் காண்பார்கள். ''இதோ, மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக்காணும், அவரைக்

குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்'' (வெளி.1:7). மேலும் வானமும், பூமியும் அதிலுள்ள யாவும் எரிந்து அழிந்து போகும். ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்றுபோம் பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்'' (2பேது.3:10) தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும் படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கி றவர்களெல்லா ரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்'' (2.தெச.1:7-9).

கர்த்தர் வரும்போது ஒரு பொதுவான உயிர்தெழுதல் நடைபெறும். நீதிமான்களும் அநீதிமான்களும் எழுந்திருப்பார்கள் (யோவான் 5:28). அவர் தமது மணவாட்டியை அல்லது சபையை தன்னிடமாய்ச் சேர்த்துக்கொள்ளும்படி வருவார். சபை தேவனுடைய இராஜ்ஜியம் என்றும், பேசப்பட்டுள்ளது. கர்த்தருடைய தூதர்கள் இராஜ்ஜியத்தின் புத்திரர்களை தனியாகப் பிரித்து, அக்கிரமக்காரர்களை அக்கினியிலே சுட்டு எரிப்பார்கள். (எபே.5:27; மத்.13:41,43) இறுதியாக, உலகத்தை நியாயந்தீர்க்கும்படி கிறிஸ்து வருகிறார். (மத்.25: அப்.17:31,32; 2.கொரி.5:10).

ஆம், கர்த்தர் நிச்சயமாக வருகிறார். அவர் எப்பொழுது வருகிறார் என்று நாம் அறியோம். ஆகிலும், அவர் வருகிறார். கேள்வி என்னவெனில், நாம் ஆயத்தமாக இருக்கப் போகிறோமா? ஆயத்தப்பட இன்றே சரியான நாள். நாளை ஒருவேளை மிகவும் தாமதப்பட்டதாகி விடலாம். வாசியுங்கள். (மத்.24:36-39; லூக்கா. 12:14-48).

**J.C.Choate** **J.C. சோட்**



பெண்கள் பகுதி

# உங்கள் கணவரிடத்தில் அன்பாயிருங்கள்



முதிர்வயதுள்ள ஸ்தீரிகள் பாலிய ஸ்தீரிகளை எச்சரிக்க வேண்டும் என்று தீத்து 2:4-ம் வசனம் கூறுகிறது. எப்படியென்றால் அவர்கள் தங்கள் கணவனில் அன்பு கூற வேண்டும் என்று எச்சரிக்கப்படவேண்டும். புருஷரிடத்தில் அன்பு கூற வேண்டும் என்ற வார்த்தை கிரேக்க பதத்திலிருந்து வந்த ஒன்று. அதன் பொருள் என்னவெனில் மென்மைத் தன்மையுடன் கூடிய பிரியம். இது ஒரு ஆலோசனையாகச் சொல்லப்படாமல் கட்டளையாகச் சொல்லப்பட்டுள்ளது.

கணவனில் அன்பு கூற வேண்டும் என்று தேவன் ஏன் வலியுறுத்துகிறார் என்பதை இன்னும் சற்று தெளிவாகத் தெரிந்து கொள்ள நாம் ஆரம்ப காலத்திற்குச் செல்வோம். ஆதியிலே தேவன் ஆணையும், பெண்ணையும் தமது சாயலாகப் படைத்தார். (ஆதி.1:26,27).ஆதாம் தன்னைப்போல் ஒருவருமில்லாமல் தனிமையாக இருப்பதை தேவன் பார்த்தார்.அவன் தனியாக இருப்பது நல்லதல்ல என்பதை தேவன் உணர்ந்தார்.

அவனுக்கு ஒரு துணையை ஏற்படுத்த வேண்டும் என்று தேவன் தீர்மானித்தார். ஏற்ற துணையை உருவாக்க வேண்டும் என்று எண்ணினார்.ஒரு விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கினார்.ஆதாம் தூங்கும் போது அவனுடைய பக்கவாட்டில் இருந்து அந்த எலும்பை எடுத்தார். பிறகு பெண்ணை தேவன் ஆதாமிடத்திற்கு கொண்டு வந்தார். தன்னில் ஒரு பகுதியாக இருக்கிறாள் என்று ஆதாம் மிகத்தெளிவாக் கூறுகிறான். ஒன்றாகக் கலந்த ஒன்றாக அவள் அவனுக்கு இருக்கிறாள். (ஆதி.2:21-23).இதுதான் உலகில் நடைபெற்ற முதல் திருமணம். மனைவியோடு தன் தகப்பனையும், தாயையும் விட்டுப் பிரிந்து இருப்பானாக என்று தேவன் கூறுகிறார். அவன் தன் மனைவியோடு இசைந்து இருக்க வேண்டும். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். எக்காலத்திற்கும் திருமணத்தைப்பற்றிய தேவனுடைய விளக்கம் இதுதான். இதை நாம் எப்படி அறிவோம்.?

ஆதியாகமத்தில் சொல்லப்பட்டதை மத்தேயு 19:4-6 வசனங்களில் இயேசு கிறிஸ்து திரும்ப சொல்லுகிறார்.ஒரு ஆணும், பெண்ணும் திருமணத்தில் இணையும்போது இரண்டு நபர்களாக இல்லாமல் ஒருவராயிருப்பார்கள் என்று வலியுத்துகிறார். அவர் மீண்டும் ஒரு காரியத்தை கூட்டிச்சொல்கிறார். ''தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்''என்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலும் ஆதியாகமத்தையும் இயேசுகிறிஸ்துவையும் இணைத்துப் பேசுகிறார். (எபே.5:31,25) தேவனுடைய அந்த திருமணத்திற்காகவிளக்கம் இன்னும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. திருமணத்தின் முக்கியத்துவத்தை விளக்க தேவன் இங்கு பவுலை உபயோகப்படுத்துகிறார். இது கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையேயுள்ள உறவைப் போன்றதாகும்.

ஆக தேவன் திருமணத்தைப்பற்றி விளக்கும் போது பிரிதல், இசைந்திருத்தல், ஒரே மாம்சமாயிருந்தல் என்று கூறுகிறார். திருமணத்தில் அடங்கியுள்ள இந்த மூன்று பாகங்களை பற்றி இப்போது நாம் பார்ப்போம்.

*பிரிந்திருத்தல்:-* நாம் திருமணம் செய்யும் போது நம் பெற்றோர்களிடையே உள்ள உறவில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நம்முடைய கணவனோடு ஒரு புதிய உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நம்மை போஷித்தலும், பயிற்சியளித்தலும் நம் பெற்றோர்களிடம் நாம் பெற்ற நன்மைகளாக இருந்தது. ஆனால் நம் கணவனுடன் கூடிய உறவு என்பது இருவரும் ஒரு கூட்டாளிகளாக மாறுவதாகும். வேலைசெய்தல், பகிர்ந்து கொள்ளுதல், போஷித்தல், பயிற்சியளித்தல் ஆகியவைகளில் கூட்டாளிகளாக செயல்பட வேண்டும். இந்த பூமியிலே நீ திருமணம் செய்துகொள்ளும் அந்த நபரானவர் வாழ்க்கைத் துணையாகவும் உன் வாழ்வில் முதல் நபராகவும் இருக்க வேண்டும்.

*இசைந்திருத்தல்:-* இசைந்திருத்தல் என்ற கிரேக்க வார்த்தையின்பொருள் என்னவென்றால் ஒன்றாக இணைதல் என்பது. சிமெண்ட் கலவைப் போல ஒன்றாக ஒட்டியிருத்தல் என்பது ஆகும். நீங்கள் திருமணமானவுடன் சுய இஷ்டமாக எதையும் செய்யக்கூடாது. நீங்களும், உங்கள் கணவனும் ஒருவருக்கொருவர் சொந்தமாகிறீர்கள். நம்மை நாமே ஆண்டு கொண்டிருந்த காலம் முடிந்தது. தேவன் இந்த ஆலோசனையை 1.கொரி. 7:4-ல் குறிப்பிடுகிறார். பால் சம்பந்தப்பட்ட உறவை தான் இது முக்கியமாகக் குறிக்கிறது. ஆனால் இது முழு உறவையும் உள்ளடக்கியுள்ளது. நீங்கள் உங்கள் கணவனை உங்கள்சொந்த மாமிசத்தைப் போல் பார்க்கவேண்டும்.

*ஒரே மாம்சமாக மாறுதல்;-* இரு நபர்கள் திருமணத்தில் ஒன்றாக இணையும்போது சரீரத்திலும் ஒன்றாக இணைகிறார்கள். அவர்கள் எண்ணத்திலும், ஆவியிலும் கட்டாயமாக ஒருமணப்பட்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நோக்கமும் ஒன்றாக இருக்க வேண்டும். இது ஒரு முழுவட்டத்தின் இரண்டு பகுதிகளைப் போன்றது. அவை இரண்டும் ஒன்றாக சேரும்போது முழு வட்ட வடிவமாகிறது. பெண் எதில் பலவீனமாயிருக்கிறாளோ அதை ஆண் பூர்த்தி செய்ய வேண்டும். அதைப் போலவே, மனிதன் எதில் பெலவீனமாயிருக்கிறானோ அதை பெண் பூர்த்தி செய்ய வேண்டும். இப்படியாக அவர்கள் முழுமையடைகிறார்கள்.

யோவான் 17:20-23 ஆகிய வசனப்பகுதிகளில், இயேசு கிறிஸ்து ஜெபம் பண்ணும்போது தானும்,பிதாவும் ஒன்றாயிருக்கிறதுபோல தன்னை விசுவாசிக்கிறவர்கள் யாவரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்கிறார். அவரைப் பின்பற்றுகிறவர்கள் எப்படி ஒன்றாயிருக்க முடியும்? கலா.2:20-ல் அவர்கள் தங்களைத் தாங்களே சிலுவையிலறைந்திருக்கிறார்கள். அவர்களில் கிறிஸ்து வாசம் செய்ய அவர்கள் தங்களை அனுமதிக்கவேண்டும். இவ்வாறாகத்தான் நீங்கள்

திருமணமானவுடன் செய்ய வேண்டும். நீங்கள் ஒரு புதிய மனிதனாக மாற உங்களையே அர்ப்பணிக்க வேண்டும். கணவனோடு இசைந்திருப்பவர்கள் இவ்வாறு செய்யவேண்டும்.

நீங்கள் இவ்வாறு செய்யும்போது அங்கே, ஒரு அற்புதமான நிகழ்ச்சி நடைபெறுகிறது. கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுடன் கூட ஒன்றாக இருக்கும்பொழுது அவர்கள் மிகுந்த கனி கொடுப்பதோடு நல் அனுபவசாலிகளாகவும் மாறுவர்கள். ஆக, உங்கள் கணவனுடன் சேர்ந்து கிறிஸ்துவை பின்பற்றுவதினால் அதிக கனி கொடுப்பதோடு அனுபவம் நிறைவு இவைகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

யோவான் 14:9-ல் இயேசு பிலிப்புடன் ''என்னைக் கண்டவன் என் பிதாவை கண்டான்'' என்கிறார். ஸ்திரீயானவள் தன் கணவனுக்காக சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறாள். அவள்தான் அவனுடைய மகிமை என்று 1.கொரி.11:7-ல் தேவன் திட்டமாக குறிப்பிட்டிருக்கிறார். யாராவது ஒருவர் உன்னைப் பார்த்தால் உன்னில் உன் கணவன் வெளிப்படவேண்டும்.திருமணத்தில் காணப்படும் அடிப்படை அன்புக்கு ''அகாபே அன்பு'' என்று பொருள். திருமணத்தின் மூன்று பாகங்களை உள்ளடக்கியது இந்த அன்பு. அதாவது பிரிதல், இசைதல், ஒரே மாமிசமாயிருத்தல் ஆகியவைகளை உள்ளடக்கியது.

1. **''அகாபேஅன்பு''** என்பது முற்றிலும் தன்னலமற்றது. தேவன் நம்மேல் காட்டின அன்புக்கு சமமானது இது. இதே அன்பை நாம் பிறரிடமும் காட்டவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். இதை நாம் கடைப்பிடிப்பதற்கு நம் மனதை பக்குவப்படுத்தி கொள்ளவேண்டும்.

யாரோ ஒருவர் நமக்கு நன்மைசெய்ததினால் அவர்களுக்கு இந்த **'அகாபே அன்பு''** காட்டி விட முடியாது அல்லது அவர்கள் அன்பாயிருப்பதினாலே அப்படிச் செய்ய முடியாது. தருணம் எதிர்பார்த்து இந்த நல்ல காரியத்தை நாம் செய்ய வேண்டும். எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டும். நம் விரோதிகளுக்கும் நன்மை செய்யவேண்டும். மற்றவர்களை பிடிக்கும் அதனால் இந்த அன்பை செலுத்துவேன் என்ற அடிப்படையில் இதைசெய்யக்கூடாது. தேவனுடைய பார்வையில் எது சரியாக இருக்குமோ, அதை அடிப்படையாக வைத்து இருக்க வேண்டும்.இந்த அன்பு கற்றுக் கொள்ளக்கூடிய அன்பு.

இந்த அகாபே அன்புக்கு உதாரணத்தை இந்தப் பகுதியில் பார்ப்போம். மத்.5:44-ல் நாம் என்ன பார்க்கிறோம்? சத்துருக்களை சிநேகியுங்கள் என்று கட்டளை பெற்றிருக்கிறோம். நம்மை சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவேண்டும் என்று பார்க்கிறோம். நம்மை வெறுக்கிறவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். நம்மை நிந்திப்பவர்களுக்காக ஜெபம் செய்யவேண்டும். இங்கு மென்மைத்தன்மை வாய்ந்த அன்பு வெளிப்படையாக கூறப்படவில்லை. ஆனால் தேவனுடைய திட்டத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது. எதுசரியோ, அதைநாம் செய்யவேண்டும்.இந்த அன்பை பற்றியதான தொடர்ச்சியை மீண்டும் அடுத்த இதழில் பார்ப்போம்!

**B. B. சோட்** **R. R. நாயகம்.**

# மிகுந்து காணப்படட்டும்

**பா**ராளும் பரமதேவனின் பாசத்தை பிரத்தியேகமாய் பெற்ற இஸ்ரவேல் ஜனங்கள் பார்வோனின் பயங்கரபிடியிலிருந்து தப்பிப்பிழைக்க வேண்டும் என்று எண்ணத்தில் ஏக்கம் கொண்டு, உள்ளத்தில் ஊக்கத்துடன், விண்ணவரிடம் உதவிக்காக நெஞ்சில் உதிரம் சிந்தி, வார்த்தையில் மிகவும் கெஞ்சி மன்றாடி விண்ணப்பம் செய்ததினால், மனமிரங்கி மன்றாடியவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்கும் நிகழ்ச்சியான விடுதலையைக் கொடுத்து, யோர்தான் நதி மட்டும் வழி நடத்தி தான் செய்த அவ்வற்புதத்திற்கு நினைவாக நதியில் கற்கள் எடுக்கச் சொன்ன நிகழ்விலிருந்து **''அன்பு''**, **''ஜெபம்''**, **''பயபக்தி''** என்னும் கற்களை நாம் இதுவரையும் கவனித்துப் பார்த்தோம்.

சீனாய் மலையில் சிருஷ்டிகரின் தூதரைக் கண்டு, எகிப்தின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தேவனின் துணையுடன் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திய மோசே மரித்தபின் யோசுவா தலைமை பொறுப்பை ஏற்றவுடன் சேனைகளின் கர்த்தர் அவனோடு சம்பாஷனை செய்கையில், ***''இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக.....''*** (யோசுவா 1:8). என்ற ஆலோசனையை யோசுவாவிற்கு சொன்னார். கானான் தேசத்திற்கு அநேகரை வழிநடத்திய யோசுவாவிடம் ***''தியானம்''*** என்கிற கல் இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்த தேவன் பரம கானானுக்கு யாத்திரைசெய்யும் நம்மிடமும் எதிர்பார்ப் பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பதால் வாலிபர்களாகிய உங்கள் முன் ***''தியானம்''*** என்னும் கல்லை இம்முறை செதுக்க எத்தனித்தெழுகிறேன்.

## தியானம் என்னும் கல்

மனித மனது ஓர் நிலையிலிராமல் ஒரு காரியத்தை செயல்படுத்திக் கொண்டு இருக்கையிலேயே, வேறொரு சிந்தையில் ஈடுபடும் இயல்புடையதாக இருக்கிறது. நமது மனதை ஒரு நிலைப்படுத்த முடியாததற்கு நமது ஐம்புலன்கள் தான் முக்கிய காரணமாயிருக்கிறது. ***மனிதன் தன் மனதின் இந்த இயல்பை அடக்கி அதை தன் வசப்படுத்தி அம்மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவந்து ஒரு காரியத்தைக் குறித்து ஆழ்ந்த சிந்தையில் ஈடுபடுவதே ''தியானமாகும்''.***

**''தியானம்''** என்கிற சொல்லைக் கேட்டவுடன் என் குறைமதிக்கு எட்டுவதெல்லாம் ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டதன் மூலம் சாராளின் கர்ப்பத்தை மலரசெய்த ஈசாக்கின் பெயர்தான். தன் வாலிப வயதில் அதாவது

திருமணம் செய்வதற்கு முன்னமே தன் சிந்தையை ஒருமனப்படுத்தும்படி பக்குவப்படுத்தினான். ஆதியாகமப் புத்தகத்தின் பக்கங்கள் இம்மாமனிதனின் வாழ்க்கையை எழில் மிகு வண்ணம் ஏந்தி நிற்கிறது. ***''ஈசாக்கு சாயங்கால வேளையில் தியானம்பண்ண வெளியிலே போயிருந்து..''*** (24:63) என்று நாம் அவனின் இப்பழக்கத்தை குறித்து வாசிக்கலாம். ஈசாக்கு தன் வாலிபத்திலே தியானிக்கும்படி வெளியிலே சென்றான். வாலிபர்களாகிய நீங்கள் இன்றைக்கு எதற்கு வெளியே செல்கிறீர்கள் என்பதை நீங்களே சீர்தூக்கி பார்த்து ஈசாக்கை போல செயல்படுவீர்கள் என நம்புகிறேன்.

சர்வவல்லமை படைத்தவரும், பராக்கிரமத்தையும் பரிசுத்தத்தையும் அணிந்தவருமான அநாதி தேவன், தான் உண்டென்று எகிப்தின் கிரீடத்திற்கு வெளிப்படுத்தும் வண்ணம் அந்நாட்டின் நீர்நிலைகளை இரத்தமாக மாற்றினார். தேசமெங்கும் நதி நாற்றமெடுத்தது. ஆனால் பார்வோனுடைய மனதை வாலிபர்களாகிய நீங்கள் கவனிப்பீர்களானால் ***''பார்வோன் இதையும் சிந்தியாமல் தன் வீட்டிற்குத் திரும்பிப்போனான்''*** (யாத். 7:23) ஒரு கொற்றவனுக்கு இருக்க வேண்டிய அடிப்படை குணமாகிய ''காரியங்களை பல கோணங்கில் நோக்கி ஆராய்ந்து பார்த்தால் இந்த எகிப்திய முடியிடம் முற்றும் இல்லாதிருந்தது. தன் தேசம் முழுவதும் நீர்நிலை பாதிக்கப்பட்டதே, இயற்கையை மாற்றும் அளவுக்கு வல்லமை படைத்த இந்த மகா தேவனோடு நாம் எதிர்த்து நிற்கக் முடியாதே என்ற சிந்தனை அவனுக்கு, ஒரு நாள் இரண்டு நாள் அல்ல , ஏழுநாள் அளவும் வரவேயில்லை. (யாத்.7:25) இவன் கர்த்தருடைய மகத்துவங்களை தியானித்துப் பார்க்காதபடியால் பெரும் இழப்பை தனக்கும் தன் தேசத்திற்கும் பெற்றுத்தந்தான். வாலிபர்களாகிய நீங்கள் இப்படியிராமல், இஸ்ரவேலின் இரண்டாவது இராஜாவாகிய தாவீதைப்போல் அவருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அதை நாள் முழுவதும் தியானிப்பார்களாக (சங்.119:97) அப்பொழுது அவர் நமது கூப்பிடுதலின் சத்தத்தை நிச்சயம் கேட்டு கண்டிப்பாக இரங்குவார் (சங்.55:17).

இஸ்ரவேல் ஜனங்கள் பாலும் தேனும் ஓடுகிற இனிய கானான் தேசத்தைச் சுதந்திரமாக சுத்தரிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். தாங்கள் வெட்டாத துரவையும், கட்டாத வீட்டையும், நடாத திராட்சைத் தோட்டத்தையும் அனுபவித்தார்கள். திரளான திரவியங்களை தாங்கள் திரட்டாமல் இத்தரணியில் தயாள தேவனிடமிருந்து தயவாய் பெற்றோம் என்பதை மறந்தே போனார்கள் இந்த செருக்குற்ற செல்வ சீமான்கள். ஆகவே தேவன் எரேமியாவைக் கொண்டு சவாலான வினாத் தொடுக்கிறார் பாருங்கள். ''சந்ததியாரே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைச் சிந்தித்துப்பாருங்கள்; நான் இஸ்ரவேலுக்கு வனாந்தரமும், காரிருளான பூமியுமாக இருந்தேனோ? பின்னை ஏன் என் ஜனங்கள் நாங்களே எஜமான்கள், இனி உம்மிடத்தில் நாங்கள் வருவதில்லையென்று சொல்லுகிறார்கள்''(2:31).

இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து அவர் கேட்கும் கேள்வி யாதெனில், உங்களை உயர்ந்த கன்மலையில் வைத்தேன்.இப்பொழுதோ நீங்கள் பயங்கர பாதாளத்தில் இருக்கிறீர்களே என்ன காரணம் என்று சிந்தித்தீர்களா? என்பது தான். வாலிபர்களே, நாமும் கூட இப்படித்தானே கர்த்தரிடத்திலிருந்து நன்மைகளைப் பெறுகிறோம். ஆனால் அவரை மறந்தே போகிறோம். பிரசங்கி நமக்கு அருமை யானதொரு ஆலோசனையைத் தருகிறார். ''வாழ்வுகாலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வுகாலத்தில் சிந்தனைசெய்; மனுஷன் தனக்குப்பின் வருவதொன்றையும் கண்டுபிடியாதபடிக்குத் தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்'' (7:14) வாழ்வு நாளில் நன்மை அநுபவித்து, தாழ்வு நாளிலே சிந்தியாமல், காரியங்களை தியானம் செய்யாமல் இருந்த இஸ்ரவேல் மக்களைப் போல நாமுமிராமல் பிரசங்கியின் ஆலோசனையை இப்பிரயாத்திலேயே பின்பற்றுவோம்.

நம்முடைய அன்பின் ஆண்டவர் அகிலத்தில் அவதரித்து, அவனியில் மாந்தர் ஆவிக்குரிய காரியங்களை எளிமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமென் பதற்காக அநேக காரியங்களை எடுத்துரைத்தார். அப்படிக் கூறுகையில் வாயின் வார்த்தைகளின் ஊற்றிடம் இருதயம் தான். அதிலிருந்து தான் பொல்லாத சிந்தனைகளும் கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷனங்களும் புறப்பட்டுவரும் (மத். 15:10) தேவையில்லாத ஒன்று ஓரிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது என்றால் அது எங்கு புறப்படுகிறதோ அங்கேயே தடுக்கப்பட வேண்டும் என்ற காரியத்தை வாலிபர்களாகிய நீங்கள் நிச்சயம் உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறேன். நமது இரட்சகரும் இதைக் தான் இங்கு விளம்புகிறார்.

நம்முடைய சிந்தனைகள் நம்மை நித்திய அக்கினைக்கு கொண்டுபோய் சேர்த்துவிடும் என்பதை அறிந்து, சங்கீதக்காரனைப் போல், வீண் சிந்தனைகளை வெறுத்து, அவருடைய வேதத்தில் பிரியமாக இரவும் பகலும் தியானித்து நாம் பாவம் செய்யாதபடி அதை நம்முடைய இருதயத்தில் வைத்து வைக்கவேண்டும்.(சங்.119:113,11;1:2) ஆதியிலே ஆழியின் நீர் ஆர்பரித்துக் கொண்டிருக்கையில், தேவன் அதற்கு கரையை உண்டு பண்ணி இதற்கு மேல் வராதே என்று உத்தரவிட்டார். அதைப்போலவே, நம்முடைய சிந்தனைகள் கட்டுக்கடங்காத காட்டாற்று வெள்ளம்போல் புறண்டு வந்தாலும், வேத வசனம் என்னும் திடமான கரையிட்டு நாம் வீணான கற்பனைச் செய்து, சிந்தையில் கறைபடாமல் காத்துக் கொள்ள அவருடைய கற்பனைகளை தியானிப்போமாக. தேவன் தாமே இக்காரியத்தில் உங்களுக்கு உதவிசெய்வாராக! ஆமென்!.

ஜே. பிக்கின்ஸ்.

# எஸ்றா ஒரு கண்ணோட்டம்

**1. காலம்** : ஏறக்குறைய கி.மு. 457- 444

**2. ஆசிரியர்** : எஸ்றா (எஸ்றா என்பதற்கு உதவி என்று பொருள்படும்)

**3. இந்நூல் பற்றி** :

அ) எஸ்றா, நெகேமியா ஆகிய நூல்கள் சமீபகாலம் வரை ஒரே புத்தகமாக இருந்திருக்கிறது.

பராம்பரியம்

ஆ) எஸ்றாவின் காலத்திற்கு முன்பாக இருந்த பழைய ஏற்பாட்டு நூல்களை இவன் ஒழுங்குபடுத்தியிருக்கக் கூடும்.

இ) இயேசுவின் காலம் வரை இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரித்து வந்த சனகரிப் சங்கம் இவனுடைய காலத்தில் உதயமாக இவன் செய்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஈ) யூதா ஜனங்களின் ஒரு பிரிவான பரிசேயர்கள் இவனுடைய காலத்திலே தோன்றியிருக்கக் கூடும்.

உ) வேதாகமத்தை பிரதி எடுக்கிற வேலையைச் செய்யும் வேதா பாரகர்கள் உருவாக இவன் பெரிதும் காரணமாயிருக்கக் கூடும்.

**4. இந்நூலின் செய்தி:**

a. தேவன் தன் ஜனங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார் என்பதை இந்நூல் காட்டுகிறது.

b. ஜனங்கள் பரிசுத்தத்தை காத்துக்கொள்வது அவர்களது கடமை என்று வலியுறுத்துகிறது.

C. தேசத்தின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மையமாய் இருக்கிற தேவாலயத்தை மீட்டு அமைப்பதில் எஸ்றாவுக்கு பெரும் பங்கு இருந்திருக்கிறது.



# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம்: பதினான்கு

வெளிப்படுத்தல் 12:17ம் வசனமானது "தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுக் கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவருடைய சந்ததியான மற்றவர்களுடனே", யுத்தம் பண்ணச் சென்ற சாத்தானாகிய (12:9) வலுசர்ப்பத்தினுடைய கோபத்தை நமக்குக் காட்டியது. 13-ம் அதிகாரமானது " பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணவும்" (13:7) பூமியின் குடிகளை மோசம் போக்கவும் (13:14) சாத்தானாலே பயன்படுத்தப்பட்டஅதிகாரம் கொண்ட இரண்டு மிருகங்கள் பற்றிக் காட்டியது. மிருகத்தின் சொரூபத்தை வணங்க மறுத்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் (13:5) வெளிப்படுத்தல் 13-ம் அதிகாரமானது, பிசாசு வெற்றிகொண்டு தேவனுடைய ஜனங்களை மேற்கொள்ளுகிறது போல தோற்றமளித்தாலும், பூமியிலுள்ள உண்மை நிலை அதற்கு நேர் மாறாகவே இருக்கிறதென்பதை விவரிக்கிறது. வெளிப்படுத்தல் பதினான்கு, நித்தியத்தில் என்ன நடக்கும் என்ற இறுதிமுடிவைக் காட்டுகிறது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, தேவனை மாத்திரம் ஆராதித்து அவரை மகிமைப்படுத்துபவர்கள், மீட்கப்பட்டு தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக, ஆட்டுக்குட்டியானவருடன்; நித்தியகாலமாக பரலோகத்தில் நிற்பார்கள் (வெளி.14:1-7;12-13)மிருகத்தையும் அதனுடைய சொரூபத்தையும் வணங்கி அவனுடைய அடையாளத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தேவனுடைய கோபாக்கினையைக் குறித்து, நரகத்தில், நித்திய காலத்திற்கு இரவும் பகலும் வாதிக்கப்படுவார்கள். (வெளி.14:8-11;14-20)

வெளிப்படுத்தல் 14-ம் அதிகாரமானது அப்போஸ்தலன் யோவான், "சீயோன் மலைமேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடே கூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும்" பார்ப்பதாகத் தொடங்குகிறது (14:1) இது தங்களுடைய நெற்றி அல்லது கைகளில், மிருகத்தின் அடையாளத்தைக் கொண்டிருந்தவர் களுக்கு நேர்மாறாக உள்ளது. (13:16,17;14:9) இந்த 1,44,000 த்தை நாம் ஏற்கனவே அதிகாரம் 7-ல் கண்டோம். அங்கே பூமியில் நான்கு மூலைகளிலும் நின்ற நான்கு தூதர்கள், பூமியைச் தேசப்டுத்துகிறதற்கு முன்பாக, முதலில்."தேவனுடைய ஊழியக்காரர்களின்" நெற்றிகளில் முத்திரை போடப் பட்டது (வெளி.7:1-3) இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்து, கோத்திரத்திற்கு 12,000 என்று முத்திரை போடப்பட்டார்கள் (7:4-8) நாம் ஏழாம் அதிகாரத்தைப் படித்தபோது,இது, ஒரு உருவக எண் என்றும், இது இரண்டு ஏற்பாடுகளின் கீழுள்ள தேவனுடைய உண்மையுள்ள மனிதர்களைக் குறிக்கிறதென்று தெளிவாகவே கண்டோம். அடுத்து, யோவான் ஒரு சத்தத்தைக்

கேட்கிறார்.''அல்லாமலும் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது,'' அவர்கள் சிங்கானத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும், புதுப்பட்டைப் பாடினார்கள்: அந்தப்பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது'' (14:2,3) பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும் வானத்திலிருந்து கேட்ட சத்தம் அடையாளப் படுத்தப் படவில்லை. வெளிப்படுத் தலின் வேறு இடத்தில் கிறிஸ்துவின் சத்தம் விவரிக்கப்பட்டுள்ளது (வெளி.1:15) அது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து வருகிற துதியின் சத்தமாக சொல்லப்ப (19:5,6) இங்கே அந்த சத்தம் சுரமண்டங்களின் ஓசையோடு புதுப்பாட்டைப் பாடுகிற சத்தத்தோடு சேர்ந்து சொல்லுகிறது.

பரலோகத்தில் சொல் அர்த்த ரீதியிலான சுரமண்டலம் இருக்க முடியாது. ஆகவே அது அநித்தியமானது (2.கொரி.4:18) பரலோகம் என்பது காணப்படாத, நித்தியமான வாசஸ்தலம் ஆகையால் இன்றைக்கு ஆராதனைகளில் கிறிஸ்தவர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்தலாம் என்பதற்கு, வெளி.14:2-ம் வசனம் எந்த அதிகாரத்தையும் அளிப்பதில்லை. யோவான் கண்ட பரலோக தரிசனத்தில், உருவக ரீதியில் விவரிக்கப்பட்டுள்ள காரியங்களை நாம் சொல்லத்த ரீதியில் எடுத்துக்கொண்டு, இந்த பூமியில் நாம் தேவனுக்காகச் செய்யும் ஆராதனை களுக்காக அர்த்தம் கொள்ள கூடாது. நான்காம் அதிகாரத்தில், முதலில் அறிமுக மான அதே நான்கு மிருகங்களும் 24 மூப்பர்களும் இங்கே மூன்றாம் வசனத்தில் காணப்படுகின்றனர். இந்த மிருகங்களுக்கும், மூப்பர்களுக்கும் முன்பாகவும், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகவும், பூமியிலிருந்து மீட்கப்பட்ட 1,44,000 பேர் வேறொருவரும் கற்றுக்கொள்ளாத புதுப்பாட்டை பாடினார்கள். இது இரட்சிக்கப்பட்டவர்கள், அருமையான, கற்பனையே செய்ய முடியாத ஆசீர்வாதங்களை நித்திய காலத்திற்கு பரலோகத்தில் அநுபவிப்பார்கள் என்பதற்கு நிச்சயமான முன்னடையாளமாயிருக்கிறது. இந்த அழகான பரலோக எண், நாமும் இந்த எண்ணுக்குப் பங்காளிகளாக இருக்க வேண்டுமென்ற ஏவலை நமக்கு ஏற்படுத்தி, அதற்காக முழு பலத்தோடும் முயற்சி செய்யப் பண்ண வேண்டும்!

பிரிவினைச் சபை மக்கள் அநேகர் செய்வது போல, இந்த எண்ணைச் சொல்லர்த்த ரீதியில், எடுத்துக் கொள்வதற்கு அதிகாரங்கள் 7 அல்லது 14-ல் எந்த ஆதாரமும் இல்லை. வசனம் 4 '' ஸ்திரீகளால் தங்களைக் கறைபடுத்தாவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே'' என்று சொல்லுகிறது. இஸ்ரவேலின் 12 கோத்திரங்களை சேர்ந்த கற்புள்ள ஆண்கள் மட்டும் பரலோகத்திற்குப்போக முடியுமென்று யாரும் நம்புவதில்லை. உருவகரீதியில் விளக்கப்பட்டுள்ள மீட்கப்பட்டவர்களின் தொகையை சொல்லர்த்த ரீதியில் எடுத்துக்கொள்வது, அறிவுக்கு ஒவ்வாததும் முரணானதுமாகும். ''ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து

தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்'' என்று இந்த உருவக எண் இவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (14:4).

கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதியில் கற்புள்ளவர்களாயிருந்து, பாவத்தால் கறைபடாமல் (2.கொரி. 11:2;எபே.5:25-27)கனிகளிலே சிறந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் முழுமையாகக் கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும். (1.பேதுரு.2:21;4:1,2;மத்.10:25;லூக்.6:40;ரோம.8:29; பலி.2:5-8) மீட்கப்பட்டவர்கள் வெளி 14:5 இந்த வகையில் விவரிக்கிறது. ''இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை. இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்'' என்று தங்களுடைய ஆண்டவராகிய கிறிஸ்துவைப் போலவே கர்த்தருடைய சீடர்களும் வஞ்சனையும் கபடும் அற்றவர்களாயிருக்க வேண்டும். (யோவா.1:47;1.பேது.2:1,22;3:10) குற்றமற்றவர்களாயுமிருக்க வேண்டும். (எபே.1:4;5:27;கொலே.1:22;1.தெச.3:12,13; எபி.9:14;1.பேது.1:19; யூதா.24) இது, மீட்கப்பட்டவர்கள் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. நம்முடைய இரட்சிப்புக்குப் பாவ மன்னிப்பானது அவசியமும், மிகவும் முக்கியமானதாகும். (மத்.26:28;யோவா.8:21; அப்.2:38; 1.கொரி.15:17) ஆனால் நாம் வளர வேண்டுமென தேவன் கட்டளையிடுகிறார்.(2.பேது.3:18)மற்றும் நமக்கான தேவனுடைய திட்டம், ஆவிக்குரிய ரீதியில் நாம் முழுமையடையும் வரை, நம்முடைய இருதயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதாகும் (அப்.15:9; மத்.5:48; லூக்.6:40;எபி.6:1;1.யோவா. 1:9;2:5; 4:12)பாவத்தை எதிர்த்து அதை மேற்கொள்ளும்படியாகவே தேவன் உண்மையில் நம்மை அழைத்திருக்கிறார். (2.கொரி.10:5;எபே.6:10-18;எபி.12: 1-4; 1.யோவா.2:1)

ஆட்டுக்குட்டியானவரையும், அவருடைய மீட்கப்பட்டவர்களையும் பரலோகத்தில்கண்ட தரிசனத்திற்குப் பிறகு, யோவான் இப்படியொரு காட்சியைக் கண்டார். பின்பு வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்க கண்டேன். அவன் பூமியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக, நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு தேவனுக்கு பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது, வானத்தையும்,பூமியையும், சமுத்திரத்தையும், நீருற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள் என்று கூறினான் (14:6,7)இந்த இரண்டு வசனங்களில், கவனிக்கத்தக்க பலமுக்கியமான காரியங்கள் உண்டு. முதலாவதாக கிறிஸ்துவின் சுவிசேஷம் ''நித்தியமானது'' தேவனுடைய வார்த்தை ஒருபோதும் ஒழிந்து போகாது (மத்.24:35;1.பேது.1:23)இரண்டாவதாக, சுவிசேஷம் ஒவ்வொரு மனிதனுக்குமானது எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். (எசே.33:11;1.தீமோ.2:4; 2.பேது.3:9) மூன்றாவதாக தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்த வேண்டுமென்று நாம்

நினைவூட்டப் படுகிறோம்.(பிர.12:13;அப்.10:34,35) நான்காவதாக, நித்திய நியாயத் தீர்ப்புக்கான நேரம் வருகிறதென்று நினைவூட்டப்படுகிறோம். இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலமாக தேவன் ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த வாக்குறுதியைக் கொடுத்துள்ளார். (அப்.17:31)ஐந்தாவதாக, தேவனை வணங்கும் படியாக நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். வெளிப்படுத்தல் 13-ல் உலகம் ஆச்சரியத்தோடே மிருகத்தைப் பின்பற்றி,வலுசர்ப்பத்தையும், மிருகத்தையும், அதின் சொருபத்தையும் வணங்கிற்று. ஆனால் மத் 4:10-ல் இயேசு பிசாசிடம் ''உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக'' என்று சொன்னதுபோல் செய்யவேண்டும். ஆறாவதாக, எல்லாற்றையும் படைத்தவர் தேவன் தான் என்று நினைவுபடுத்தப்படுகிறோம். இங்கே அவரை வணங்கும்படியாகக் கட்டளை கொடுக்கப்பட்டிருப்பது. அவர் சிருஷ்டிகர் என்ற அடிப்படையில் தான் என்பதையும் நாம் கவனிக்கமுடிகிறது. (வெளி. 4:9-11) இறுதியாக, வெளி.14:1-7 வசனங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷம், விசுவாசிக்கிறவர்களுக்கு இரட்சிப்புண்டாக தேவ பெலனாயிருக்கிற தென்று தெளிவாகக் காண்கிறோம் (ரோம.1:16) மீட்கப்பட்டவர்களாக இங்கே சொல்லப்பட்டிருப்பவர்கள், சுவிசேஷத்தை விசுவாசித்துக் கீழ்ப்படிந்து (எபி.5:9) மரணபரியந்தம், உறுதியாவும் உண்மையாயும் இருந்தவர்கள் (வெளி.2:10) அவர்கள்தான்13-ம் அதிகாரத்தில் மிருகத்தையும் அதின் சொருபத்தையும் வணங்க மறுத்ததினாலே கொல்லப்பட்டவர்கள். ஆனால், பரலோகில் அவர்கள் வெற்றியாளர்கள். வெளிப்படுத்தல் நூலின் ஒவ்வொரு காட்சியிலும் துன்புறுத்தப் பட்ட கிறிஸ்தவர்கள் முடிவிலே வெற்றி பெறுவதையும், துன்புறுத்தியவர்கள் நித்திய அழிவுக்குச் செல்வதையும் நாம் காண்கிறோம். பதினான்காம் அதிகாரம் இந்த அருமையான உற்சாகமூட்டும் பாடத்திற்கான இறுதி உதாரணமாகும்.

14-ம் அதிகாரத்தின் முதல் ஏழு வசனங்களுக்கு நேர் மாறானதாக 8-11 வசனப்பகுதி உள்ளது. வசனம் 8-ல் ''வேறொரு தூதன் பின்சென்று பாபிலோன் மகாநகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாலோ! என்றான்'' பாபிலோன் பற்றி, வெளிப்படுத்தலில் இங்கு தான் முதல் குறிப்பிடப்படுகிறது. இந்தப்பட்டணத்தின் வீழ்ச்சி 16-18 அதிகாரங்களில் முன் வைக்கப்பட்டுள்ளது. ரோம சாம்ராஜ்ஜியத்தின் நாட்களில் கிறிஸ்துவின் சபையானது கடும் உபத்திரவத்தின் கீழிருந்த போது குறிப்பாக முதல் நூற்றாண்டின் இறுதியில், தேவனுடைய ஜனங்கள் சிறுமைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டதற்கு, அப்பொழுதிருந்த அசல் பாபிலோன் சரியான அடையாமாயிருந்தது. பாபிலோன் விழந்தது. விழுந்தது. (வெளி.18:2 ஐப் பார்க்க) என்பது பழைய பாபிலோன் விழும் என்று முன்னுரைக்கப்பட்டதைப் பிரதிபலிக்கிறது (ஏசா. 21:9; எரே.51:8) கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தின வர்களும், இந்த பாபிலோன் போலவே விழுந்து போவார்கள் என்பதற்கு இது உருவகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மகா நகரமாகிய ''பாபிலோன்'' விழுந்தது ஏனெனில், தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும்

குடிக்கக் கொடுத்தாளே! (வெளி.17:1-5; 18:2-3; 19:2ஆகிய வசனங்களையும் பார்க்கவும்) உதாரணத்திற்கு, உலகமனைத்தும் மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப் பட்டு மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கிற்று. (வெளி.13:3,4) இப்படி வணங்கியவர்களுக்கெல்லாம் என்ன நேர்ந்தது என்று நாம் இப்பொழுது பார்க்கிறோம். வெளி.14:9-11 வசனங்களின்படி, மிருகத்தையும், அதின் சொரூ பத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொண்டவர்கள் தேவனுடைய உக்கிர கோபாக்கி னையைக் குடித்து, அக்கினியினாலும், கந்தகத்தினாலும், இரவும், பகலும் இளைப் பாறுதலில்லாமல், பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் வாதிக்கப்படுவார்கள். இந்த தண்டனைக்கு முடிவிராது. நித்திய காலத்திற்கும் இருக்கும்.

வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசிக்கான நித்திய நியாயத்தீர்ப்பு வெளி.19:20 மற்றும் 20:10-ல் விவரிக்கப்பட்டிருக்கும்போது மிருகத்தையும், கள்ளதீர்க்கதரிசியையும் பின்பற்றுகிறவர்களுக்கான நித்திய நியாயத்தீர்ப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக வெளி.14:12,13 வசனங்கள் கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத்தையும் தேவனுடைய கட்டளைகளையும் கைக்கொண்டு, சோதனைகளையும், உபத்திரவங்களையும் சகித்த பரிசுத்தவான் களுக்கு ஆயத்தமாக வைக்கப்பட்டிருக்கிற நித்திய பலனை மீண்டும் காட்டுகிறது. பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது;அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைபாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று. (14:13).

வெளிப்படுத்தலில் உள்ள ஏழு ஆசீர்வாதங்களில் இரண்டாவதான இது , எவ்வளவு மகத்தான ஆசீர்வாதம்! கிறிஸ்துவுக்குள்ளாக மரிப்பது ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதம். ஏனெனில் இந்த பூமிக்குரிய பாடுகளிலிருந்து ஓய்ந்த நம்முடைய நற்கிரியைகளுக்கேற்ற பலனை நித்திய காலத்திற்கும் பெற்றுக்கொள்ளுவோம் , (மத்.6:19-21;கொலே.3:23,24 வசனப்பகுதியை பாருங்கள்). ஓய்ந்திருப்போம் என்று சொல்வதின் பொருள் பரலோகத்தில் நாம் எதுவுமே செய்யமாட்டோம் என்பதல்ல, எபிரேயர் 4:10 ல் ஏனெனில் அவருடைய இளைபாருதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, தானும் தன்கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான் என்று சொல்லுகிறது. "தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். அதிலிருந்து அவர் கிரியை நடப்பித்துக் கொண்டு வருகிறார். நாமும் பரலோகத்தில் தேவனை போல ஓய்ந்திருப்போம். குறிப்பிட்ட காலத்திற்கு ஓய்வு கொடுக்கப்பட்டதற்கு பின் பரலோகத்தின் நித்திய காலமெல் லாம் தேவனுக்கு எப்பொழுதும் ஊழியம் செய்கிறவர்களாயிருப்போம்.

தேவனுக்குக் கீழ்ப்படியாத அனைவரையும் ஆக்கினைக்குள்ளாக்கும்படி, தன்னுடைய தூதர்களோடு மீண்டும் வருவேன் என்று இயேசு வாக்களித்


துள்ளார்.(மத்.13:40-42,49,50; 25:31-46;2.தெச.1:7-10) இதே சம்பவம் வெளி.14:14-20 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். அங்கே கிறிஸ்துவும் அவருடைய தூதர்களும் உலகத்தின் முடிவில் பூமியின் விளைவை அறுத்து, துன்மார்க்கரை தண்டிப்பார்களென்று சொல்லப்பட்டுள்ளது. யோவான், '' இதோ வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின் மேல்'' மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டுள்ளார். (14:14) அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி; பூமியின் பயிர் முதிர்ந்தது.அறுக்கிறதற்குக் காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். (14:15) அப்பொழுது, மேகத்தின் மேல் உட்கார்ந்தவர் பூமியின் விளைவை அறுத்தார். (14:16).

அதன் பிறகு ''அக்கினியின் மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டு வந்து கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி; பூமியின் திராட்சைப்பழங்கள் பழுத்திருக்கிறது. கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான். அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப்பூமியின் மேலே நீட்டி, பூமியின் திராட்சைப்பழங்களை அறுத்து தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான். நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது. அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறு நூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகி வந்தது'' (வெளி.14:18-20) இது நம்புவதற்கு அரிதான அளவில் துன்மார்க்கன் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. அங்கே, ஆலையிலிருந்து வெளியான இரத்தம் சுமார் இரண்டு மீட்டர் அழமும், சரியாக 320.கி.மீ. நீளமும் உடையதாக இருந்தது. வெளிப்படுத்தல் 14-ம் அதிகாரமானது,பரலோகத்தில், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக, ஆட்டுக்குட்டியானவருடன் சேர்ந்து, மீட்கப்பட்டவர்களுடன் நாமும் சேர்ந்து புதுப்பாட்டைப் பாடுகிறவர்களாயிருக்க வேண்டுமென்று என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். தேவனுடைய நித்திய கோபாக்கினைக்கு ஆளாகிறவர்களுடன் நாம் பங்குள்ளவர்களாக கண்டிப்பாக இருக்கக் கூடாது.

**Jon Macon** **EZSR**

### சபையின் ஆரம்பம் பற்றி....

*1. உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவனுடைய நோக்கத்திலிருந்து*
*2. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டது.*
*3. யோவான் ஸ்நானகனாலும், கிறிஸ்துவினாலும் ஆயத்தப்படுத்தப்பட்டது.*
*4. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் பூரணமாய் வெளிப்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது*



(சிறுவர்பகுதி)

# காவல்காரனும் ஒரு சுவரும்

எனதருமை சின்னத்தம்பி, தங்கைகளே உங்கள் யாவருக்கும் நமது இரட்சகர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். வெளிவரும் சிறுவர் பகுதி பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். இம்மாதம் நாம் உலக அதிசயங்களில் ஒன்றான சீனப்பெருஞ் சுவரை பற்றிப் பார்த்து பயனடைவோம்.

நீங்கள் எப்போதாவது ஒரு மிகப்பெரிய வானளாவிய பல மாடிகள் உள்ள கட்டிடத்தையோ அல்லது உங்களை ஒரு சிறு எறும்பைப் போல் சிறியதாக்கும் ஒரு பெரும் சிலையையோ கண்டிருக்கிறீர்களா? மனிதர்கள் தங்கள் வரலாற்றில் மிகப்பெரிய அரிய படைப்புகளை உருவாக்கியுள்ளார்கள். அவற்றில் மிகப் பெரியதாக அவர்கள் படைத்தது ஒரு கட்டிடத்தையோ அல்லது பெரிய சிலையையோ உருவாக்க வில்லை. கட்டின ஒரு சுவர்தான் மனிதனின் படைப்புகளில் இன்றைக்கும் ஒரு சிறந்த படைப்பாக விளங்குகிறது.

அப்பெரும்படைப்பு சீனப்பெருஞ் சுவர்தான்! உலகிலேயே மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய படைப்பு அது. ஏறக்குறைய 4000 மைல் மைல்கள் நீளமும் 30 அடி உயரமும் அமைந்துள்ளது அச்சுவர் . அதன் மேற்பாகம் மிகப்பெரிய நான்கு சக்கர வாகனங்கள் செல்வதற்கு மிகவும் போதுமானதாக உள்ளது. அப்பெருஞ் சுவரைக் கட்ட பயன்படுத்தப்பட்டிருக்கும் செங்கற்களை எடுத்தால் நாம் வாழும் இப்பூமிமையை சுற்றி 5 அடி உரமும் 3 அடி அகலமும் கொண்ட ஒரு சுவரையே நாம் எழுப்பி விடமுடியும். இவ்வளவு பெரிய சுவரை வைத்து நாம் என்ன செய்வது?

முதற்கால சீன வரலாற்றில் சீன நாட்டு கிராமங்களை வடக்கேயிருந்து வரும் கொள்ளையர்கள் வந்து கொள்ளையிட்டு சென்று விடுவார்கள். இவர்களை தடுக்கத்தான் இப்பெருஞ் சுவர் அக்காலத்தில் எழுப்பப்பட்டது. அவற்றின் மீது ஆங்காங்கே பெரிய கோபுரங்கள் உள்ளன. அவைகள் இராணுவ வீரர்கள் (காவலர்) பதுங்கியிருந்து ஊடுருவர் காரர்கள் வருகிறார்களா என்று பார்ப்பதற்கு உதவுகின்றன.

இராணுவ வீரர்கள் (காவலர்கள்) கொள்ளையர்கள் வருவதை கண்டவுடனேயே விறகு கட்டை களையும் வைக்கோல்களையும் கூடவே நரியின் கழிவுகளையும் சேர்த்து தீ வைத்து பெரிய அளவிலான புகையை உண்டு பண்ணுவார்கள். இத்திட்டம் அந்நாட்களில் நன்றாக செயல்பட்டது.

அப்பெருஞ்சுவரில் உள்ள காவலனைப் போலவே வேதாகமம் காவலனைப் பற்றி கூறுகிறது. வேதாகமத்தில் உள்ள காவலன் எதிரிகள் கொள்ளையிட வருவதை எச்சரிக்கும்படி நெருப்பால் புகையை உண்டாக்கு வதற்குப் பதிலாக எக்காளத்தை ஊதுவான். (எசே.33:1-10)தேவன் காவல்காரர்களுக்கான சில நெறிகளை தீர்க்கதரிசிகளிடம் கூறினார். அதன்படி ஒரு காவல்காரன் கொள்ளையர்கள் வருவதைக் கண்டு எக்காளத்தை ஊதி எச்சரித்தால், அவன் தன் வேலையை நல்ல முறையில் செய்தான் என்று பொருள். அப்படி ஒரு வேலை அறிந்தும் எச்சரியாமற்போனால் அப்பட்டணத்திற்கு ஏற்படும் அழிவைக் குறித்து தேவன் அக்காவற் காரனை பொறுப்பாளியாக்குவார்.

சரி, இப்பொழுது நாம் இதை வேதாகமத்துடன் ஒப்பிடுவோம். எசேக்கியேல் வேதத்தில் சற்று தேறின தேவனுடைய ஊழியக்காரன், தேவன் நீ (எசேக்கியேல்)ஒரு காவலாளனை போன்றவன் என்று அவனுக்குச் சொன்னார். அதாவது இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை மறந்த காலத்தில் எசேக்கியேலைக் கொண்டு வசனங்களின் மூலமாக அவனை, அந்த ஜனங்களுக்கு பொறுப்பாளியாக்கினார். எசேக்கி யேலும் அப்படியே செய்து தேவனு டைய வசனங்களின் மூலமாக அவர்களை எச்சரித்தான். இப்படி செய்ததி னால் தன் வேலையை நல்ல முறையில் செய்தான். ஒருவேளை அப்படி எச்சரியாமல் இருந்திருந்தால் அவன் தேவனால் அப்பட்டணத்திற்கு வரும் அழிவுக்கு பொறுப்பாளியாக்கப் பட்டிருப்பான்.

ஆகவே, வேதாகமத்தை இச்சிறு பிராயத்திலிருந்து படிக்கும் ஆசீர்வாதம் பெற்ற நாம், நம்மோடிருப்பவர்களுக்கு, வேதத்தின் மகத்துவங்களை எடுத்துச் சொல்லவேண்டும். தேவையானால், அவர்களை நாம் எச்சரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

சரி,அடுத்தமாதம் சந்திக்கலாமா!



தமிழில்:

R.ஏபில் ரோஜர் நாயகம் **(R.A.R.Nayagam)**

# வேதாகமக் கேள்வி - பதில்

**கேள்வி** *தேவன் எப்படிப்பட்டவர்?*

**பதில்** இக்கேள்விக்கான பதிலை யாரும் முழுமையாக எடுத்துக் கூறமுடியாது!இதை விவரிக்கும்படியான அளவுக்கு மனித ஞானமோ கால அவகாசமோ அல்லது போதிய இடமோயில்லை. தேவனைப்பற்றிய சில காரியங்களை நாம் அறிந்திருந்தபோதிலும், அவர் முடிவில்லாதவர் நித்தியமானவர், அவர் அநாதியானவர் மற்றும் அவருடைய சித்தம் ஆகிய இவைகளை நாம் முழுமையாக ஒரு போதும் புரிந்து கொள்ள முடியாது.

தேவனுக்கே உரியதான சில குணாதிசயங்களை பார்க்கலாம், சுயமாக இயங்குபவர்,மாறாதவர், சர்வ ஞானமுடையவர், முழுமையான சார்பின்மை சர்வவல்லவர், சர்வவியாபி, நீதியுள்ளவர், பரிசுத்தமானவர்,நல்லவர், பாவிகளாகிய நம்மிடம் தேவன் மிகுந்த இரக்கமுள்ளவராயிருக்கிறார். ''ஒருவரும் கெட்டுப் போகமால் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' (2.பேதுரு. 3:9). 1.யோவான் 4:8-ம் வசனத்தில் தேவன் அன்பாயிருக்கிறார் என்று கூறுகிறது. தேவனைப்பற்றிய ஓர் அழகிய செய்தியை வேதாகமத்தில் லூக்கா. 15: 11-32ல் நாம் காணலாம்.இந்தப் பகுதியில் தேவன் தன் பிள்ளைகளை மிகுந்த அன்போடு கவனிக்கிறார் என்றும் தனக்கு எதிராக அவர்கள் செய்கிற எந்த அளவிலான காரியத்தையும் மன்னிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

ஆனாலும், தேவன் நல்லவராகவும் மற்றும் கண்டிப்பானவராகவுமாயிருக்கிறார் என்றும் காண்கிறோம். தம்மில் நிலைத்திருக்கிறவர்களுக்கு நல்லவரும், கீழ்ப்படியாதவர்களுக்கு கண்டிப்பானவராகவும் இருக்கிறார். அவர் ஒரு நாளில் கிறிஸ்துவைக் கொண்டு நமது கிரியையின்படி (வெளி.20:12 ) நியாயந்தீர்ப்பார் (அப்.17:31).தேவனை ஒருவர் அதிகமாக அறிந்து கொள்வதற்கு, அழமாகவும், நிதானமாகவும் அவருடைய வார்த்தையை தியானிப்பது அவசியம். இதை நீங்கள் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**கேள்வி:** ***நம்முடைய அநுதின ஜீவியத்தில் தேவனை (அறிந்து) பார்ப்பது எப்படி?***

**பதில் :** தேவனுடைய கையின் கிரியையாக சிருஷ்டிப்பின் மூலம் நாம் அநுதின ஜீவயத்தில் ஓர் அளவுக்கு அவரைக் காணலாம் (சங்.19:1-4; ரோமர். 1:20). அவரை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள, நாம் தியானிக்கவும், (வேதாகம ஆராய்ச்சி) அவருடைய சித்ததிற்கு கீழ்ப்படியவும் வேண்டும். (1.யோவா.4:6)

ஆனாலும் மனிதகுலம் தேவனை முழுமையான அளவுக்கு பார்க்க (அறிந்துகொள்ள) முடியாது. ''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்...'' (ஏசா.55:8,9)

**கேள்வி :** ***நாம் தேவனை ஏன் துதிக்கிறோம்?***

**பதில்:** அவர் என்னவாகயிருக்கிறாரோ;அவர் என்ன செய்திருக்கிறாரோ; அவர் என்ன செல்கிறாரோ;அவர் என்ன செய்வேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறாரோ அதற்காக நாம், ஜெபத்தினாலும் பாடல்கள் மூலமாக நமது நன்றியையும், துதியையும், ஸ்தோத்திரங்களையும் புகழ்ச்சியும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவருக்கு தெரிவிக்கிறோம். அவர் நமது துதிகளுக்கு பாத்திரமாக இருக்கிறதினாலே நாம் இவ்வாறு செய்கிறோம்! அது மாத்திரமல்ல அப்படி செய்வது சரியானது என்று பல வசனங்கள் கூறுகிறது. சங். 148;லூக்கா19:37; ரோமர்.15:10,11; எபி.2:12 ஆகிய வசனங்களை காண்க.

**கேள்வி:** ***தேவன் தன் சிருஷ்டிப்பில் பாவத்தையும் சேர்க்கும்படி திட்டம் வைத்திருந்தாரா?***

**பதில்:** இல்லை! இல்லைவே இல்லை! யாக்கோபு 1:18 சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல; ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. தேவன் தன் சிருஷ்டியை அதிகமாக நேசிப்பதாலே (யோவா.3:16) அவர் அதில் தீமையை சேர்ப்பது என்பது அவருடைய தன்மைக்கு முற்றிலும் எதிரானதாக இருக்கிறது.

**கேள்வி:** ***நாம் பாவம் செய்யாதிருக்கும்படி சாத்தானை உடனடியாக தேவன் ஏன் அழிக்கவில்லை?***

**பதில்:** மனிதன் பாவத்தினால் சோதிக்கப்படுவதற்கு தேவன் மூல காரணமாகயிருக்கவில்லை.(யாக்.1:12-15) தேவனுடைய ரூபத்தின்படியே சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் அவருடைய தன்மையை தன்னுடைய செயலின் மூலமாய் வெளிப்படுத்த முடியாதவனாக தேவனால் சிருஷ்டிக்கப்படவில்லை. நன்மையும் தீமையும் தேர்ந்தெடுக்கும் உரிமை நமக்கில்லாவிட்டால் நமது ஜீவியத்தில்ஆவிக்குரிய மற்றும் ஒழுக்கரீதியான காரிங்கள் ஒரு பொருட்டாகவேயிருக்காது. இதிலும் நமக்கு உதவியை செய்யும்படி நமது அன்பின் தேவன் கிருபையாக தமது குமாரன் மூலமாக நமக்கு சபையை தந்திருக்கிறார். நாம் சில வேளைகளில் தீமையான காரியங்களை தேர்ந்தெடுக்கும்போதிலும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே நமது பாவங்களிலிருந்து விடுதலை பெறும்படியாக அவர் இப்படி செய்தார். இப்படி செய்திருப்பது அவருடைய அநாதி தீர்மானமாயிருக்கிறது. (எபே.3:9-11)

ஏற்ற காலத்தில் சாத்தானை தேவன் அழிப்பார்!

# ஜெபத்திலும் திருமறை கூறும் மாதிரியே பின்பற்றப்படுகிறது

கர்த்தருடைய சபை அங்கத்தினர்கள் ஜெபிக்கும்படி கற்றுக்கொடுக்கப்படுகின்றனர். தேவனிடத்தில் அன்பு கூறுகிறதின் அடையாளத்திற்கும், தேவனிடத்தில் தனக்குள்ள சரியான உறவுமுறைக்கும் ஜெபமே மிக முக்கியமான சாட்சியளிக்கிறது. ஜெபத்திலே அநேக தவறான பயன்பாடுகளோடு ஒருவர் ஜெபித்தாலும் தேவன் அவருடைய ஜெபத்தைக் கேட்கிறார் .

## தேவனில் கூறும் அன்பும், ஜெபமும்

பரிசேயர்கள் ஜெபத்தை அதிகமாக விரும்பினார்கள், ஆகிலும் அவர்களுடைய ஜெபம் தேவனுக்கு ஏற்புடையதாயிருக்கவில்லை. (மத். 6:5;15:7,8)அவர்களின் நீண்ட ஜெபங்கள் பரலோகத்தின் பிதாவினால் கிடைக்கும் பிரதிபலனின்றி, மனிதர்கள் தங்கள் ஜெபங்களைக் கேட்டு தங்களைப் புகழ்ந்தால் போதும் என்கிற நீதியில் இருந்தது. வெறும் அழைப்புதலைக் கொண்ட வார்த்தைகள் (ஜெபங்கள்) தேவனுடைய செவிகளுக்கு எட்டவில்லை. சிந்தனையற்ற வார்த்தைகள் மனுஷர்களை ஒருவேளை பிரியப்படுத்தக்கூடும். ஆனால் அது தேவனுடைய பார்வையில் பரியாசத்துக்குரியது. ''பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்கு சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிக்கொடுப்பார்''. (யோவா.9:31)நாம், ஏற்புடைய ஜெபத்தை ஏறெடுப்பதற்கு முன் தேவனிடத்தில் நாம் அன்பு கூறுகிறோம் என்பதற்கான ஆதாரம் நமக்குத் தேவை (1.யோவா.3:18).

இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசித்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதே நாம் தேவனிடத்தில் உண்மையான அன்பு கூறுவதற்கு ஆதாரமாகும். (1.யோவா.2:1-5) தேவனையும் கிறிஸ்துவையும் அறிவதும் அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதும் பாரமானவைகளல்ல. (1.யோவா.5:3) இது விசுவாசித்தல் (1.யோவா.3:23,5:1) பாவத்திலிருந்து திரும்புதல் (1.யோவா.3:6) கிறிஸ்துவை அறிக்கையிடுதல் (1.யோவா.4:2,15) தேவனுடைய குடும்பத்தில் மறுபடியும் பிறத்தல், ஆகியவைகளை தன்னகத்தே கொண்டதும் (யோவா.3:5; அப்.2:38; ரோமர் 6:1-6) அவர் கட்டளையிட்ட யாவையும் மரணபரியந்தமும் கைக்கொள்ளவேண்டியதையும் உள்ளடக்கியது. (மத்.28:20).

தேவனிடத்தில் நாம் அன்பு கூர்ந்து கீழ்ப்படிந்து அதன் மூலம் நமது அன்பு நிரூபணமாகும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் சுத்திகரிக்கப்பட்டு, சரீரமாகிய கிறிஸ்துவின் சபையில் தேவனுடைய குடும்பத்தில் சேர்க்கப்படுகிறோம். (அப்.2:47;கலா.3:26,27) கி.பி. 33-ல் இயேசு தமது சபையை ஸ்தாபிதம் செய்தபிறகு எந்த மனிதனும் சுவசேஷத்திற்கு கீழ்ப்படிவதன் மூலம் தனது பாவங்கள் கழுவப்படாதவரை ஜெபிக்கும்படி கூறப்பட்டதற்கான ஆதாரவசனம்

எதுவுமில்லை. (1.பேதுரு 1.22 காண்க) இக்காரணத்தால் கிறிஸ்துவின் சபை பிராந்தியங்களில் வியாகுலமேடை அல்லது "ஜெப பீடம்" போன்றவைகளுக்கு இடமளிக்கப்படவில்லை. சபையாகிய ஆவிக்குரிய குடும்பத்தில் இருப்போருக்கு ஜெபம் என்பது மிக அருமையான சிலாக்கியமாகும். அது தேவனுடைய குடும்பத்தில் நுழைந்ததைவிட சிலாக்கியமுள்ளது.

## அடிக்கடியான ஜெபம்

பாவிகள் தங்களின் ஜெபங்கள் மூலம் கடந்தகாலப் பாவங்களிலிருந்து விடுபட்டு இரட்சிப்படைய முடியாது. எனினும் அவர்கள் ஜெபத்தோடு மனம் நொறுங்குண்டு தாழ்மையோடும் தர்சு பட்டணத்தானாகிய சவுலைப்போல் செயல்பட்டு (அப்.9:11) நாங்கள் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியோடு வரவேண்டும். (அப்.2:37,38). தான் இரட்சிப்படைய கிறிஸ்துவின் கட்டளை களுக்குக் கீழ்ப்படிந்த பின் (மாற்கு 16:16) ஒவ்வொரு கிறிஸ்தவனின் அன்றாட வாழ்க்கையிலும் ஜெபம் என்பது அவர்களின் அத்தியாவசியமான தொன்றாகும். (1.தெச.5:17) பரிசுத்தவான்களின் கூட்டத்திலும் அது பிரதானமானது மனந்திரும்பி ஜெபிப்பதன் மூலம் தேவனுடைய பிள்ளைகளுக்கு பாவமன்னிப்பு உண்டாகிறது அவனது அன்றாட வாழ்க்கையில் அறியாமையினாலும், பலவீனங்களினாலும், அசதியாலும், செயல்படும் பாவங்களுக்கு பாவமன்னிப்பு ஜெபத்தினால் உண்டாகிறது . (அப்.8:14-24).

## கிறிஸ்தவன் எதற்காக ஜெபிக்க வேண்டும்?

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் பாவமன்னிப்புக்கேட்டு ஜெபம் செய்வதுடன் (1.யோவா.1:9) எல்லாவற்றிற்காகவும் ஜெபம் செய்ய வேண்டும் (பிலி.4:6) பின்வரும் காரியங்களும் அவைகளில் அடங்கும்.

**1. நாம் ஜெபிக்கும்போது தேவனைத்துதித்து அவரது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும்** (மத்.6:9) நமக்கு மேலானவராகிய அவரது மகத்துவம், பூரண சற்குணம், பாவமின்மை, மகா மேன்மை, மாறாத பிரசன்னம், இரக்கம் மற்றும் அவரது நல்ல குணத்திற்காக அவருக்குரிய ஸ்தானத்தை நாம் அவருக்கு அளிக்க வேண்டும். நாம் ஒன்றுக்கும் உதவாத மண்ணானவர்கள் (சங்.103.4) சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக நாம் பிரயோஜனமற்ற வர்கள். ஆதலால் அவர் எப்பொழுதும் ஸ்தோத்திரிக்கப்பட வேண்டியவர்.

**2. நன்றியறிதல்.** எல்லாவற்றிற்காகவும் நன்றி செலுத்தவேண்டும். பரிசுத்த ஆவியின் வரத்திற்காக, தேவனுடைய அன்பிற்காக,கிறிஸ்துவுக்காக, அவருடைய சபைக்காக கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளுக்காக மற்றும் தேவனுடைய எண்ணற்ற ஆசீர்வாதங்களுக்காக நாம் நன்றி செலுத்த வேண்டும். அநேக சங்கீதங்கள் ஜெபத்தில் நன்றி தெரிவிக்கிறவைகளாகவே காணப்படு கின்றன. சங்.8,9,30,35,103,117,110 ஆகிய அதிகாரங்களை காண்க.

**3. ஞானம்:** தேவனிடத்தில் கேட்பவர்களுக்கு அவர் ஞானத்தைக் கொடுக்கிறார் (2.நாளா 1: 1-13; யாக்.1:5) வசனங்களைப் படிப்பதன் மூலம் தேவனுடைய சித்தத்தைக் குறித்த அறிவை நாம் பெறுகிறோம். (2.தீமோ.2:15;3:16-17; சங்.111:5), ஆகிலும் ஜெபத்தின் மூலமாக மட்டுமே அந்த அறிவை பயன்படுத்தும் விவேகத்தைப் பெறுகிறோம்.

4. மற்ற காரியங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள் பிரசங்கியார்களுக்காகவும் வேத போதகர்களுக்காகவும், மூப்பர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும்.(2.தெச.3:1) அவர்கள் அனைத்துக் கிறிஸ்தவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும். (கொலே 4:2,3;எபிரேயர் 13:18) அரசாங்க அதிகாரிகளுக்காகவும், ஆளுகை செய்பவர்களுக் காகவும், ஜெபிக்கவேண்டும். (1.தீமோ.2:1-2) நமது சத்துருக்களை சிநேகிக்கவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டும் என்று இயேசு குறிப்பிட்டார் (மத்.5:43-45) ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்'' (ரோமர் 5:8)ஆதலால் அவருடைய சீஷர்களையும் இச்செயல் ஊக்கமளித்து சத்துருக்கள் முதற்கொண்டு எல்லா மனுஷர்களையும் நேசிக்கவும் அவர்களுக்காக ஜெபிக்கவும் செய்கிறது.

**5. சோதனையிலிருந்து விடுதலை.** இயேசு தமது சீஷர்களிடம் ''நீங்கள் சோதனை களுக்குட்படாதபடிக்கு, விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ஆவி உற்சாகமுள்ளது தான். மாம்சமோ பலவீனமுள்ளது'' என்றார்(மத்.26:41) மேலும் தமது மாதிரி ஜெபத்தில் ''எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்'' என்று கூறினார்(மத்.6:13) தேவன் நம்மை சோதிப்பதில்லை, ஆகிலும் சோதிக்கப்படும்படி அவர் அனுமதிக்கிறார். (யாக்.1:16) '' உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்கு தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார். (1.கொரி.10:13).

**6. சமாதானத்திற்காக:** இன்றைய உலகிற்கு சமாதானம் அவசியமானதொன்று. ஆகிலும் காலத்தினூடே மனிதர்கள் சமாதானத்தைதேடி அலைந்து அநேக வழிகளில் அதைப் பெற்றுக்கொள்ளக்கூடாது. பிலிப் 4:6,7 ஐ வாசித்து நிலையான சமாதானத்தைப் பெறுவதற்கு தேவனுடைய வழியைப் பற்றி கொள்ளுங்கள்.

**7. ஐக்கியம்:** சபையின் ஸ்தாபகரும் தலைவருமான இயேசு தம்மில் விசுவாச முடைய அனைத்து சீஷர்களும், ஒருவரில் ஒருவர் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும் என்று ஜெபித்தார். அந்த ஒற்றுமை தாமும் பிதாவும் ''ஒன்றாயிருப்பதைப்'' போலிருக்கவேண்டும் என்று விரும்பினார். (யோவா.17:20,21)சபையின் அங்கத்தினர்களுக்கு இயேசுவின் ஜெபம் ஒரு முன்மாதிரியாய் இருப்பதால், அனைத்துக் கிறிஸ்தவர்களும் ''ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். (1.கொரி.1:10-13) பெயர் வைப்பதிலும் உபதேசக் கோட்பாடுகளிலும் கொண்டுள்ள பிரிவினைகள் பாவமானவைகள். ஆதலால் சபைக்குள் பிரிவினை ஆவி இல்லாதபடிக்கு அவைகளை தவிர்க்க

வேண்டும் எனக்கட்டளையிடப்படுகிறோம். ஆதலால் நாம் நாமகரணக் கூட்டப் பிரிவுகள் முழுமையாக அழிக்கப்பட ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். ''நாம் மனுஷருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்கு கீழ்ப்படிந்தால்'' (அப்.5:29) தேவனுடைய வாக்கின்படி போதித்தால்.(1.பேதுரு.4:11). கிறிஸ்து எந்த சபைக்கு மரித்தாரோ அந்த சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களை தாம் சேர்த்துக் கொள்கிற தமது சபையாகிய அந்த ஒரே சரீரத்தில் ஒற்றுமை உண்டாகும். (அப்.20:20-28; 2:47) பிதாவினிடத்தில் ஜெபித்த இயேசுவின் ஜெபத்தில் சத்தியமும் ஒற்றுமையும் பெரும்பங்கைப் பெற்றிருந்தது.

**தேவன் ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார்.**

நாம் ஜெபிக்கும் போது'' **விசுவாசத்தோடும்'' ''தேவனுடைய சித்தத்தின் படியும்''** ஜெபிக்க வேண்டும். அப்பொழுது தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு பதில் அளிப்பார். (மத்.7;7-11;21:22;1.யோவா.5:14) சிலர் தங்கள் இச்சைகள் நிறைவேற ஜெபிப்பதால் அவர்களுடைய ஜெபம் கேட்கப்படுவதில்லை. (யாக். 4:1-3) ஜெபங்கள் நேர்மையானவைகளும் உண்மையானவைகளு மாயிருக்க வேண்டும்.(சங்.17:1;ஏசாயா.29:13)அவைகள் தாழ்மையோடே ஏறெடுக்கப்பட வேண்டும். (லூக்.18:14)


**மத்தியஸ்தராகிய கிறிஸ்து**

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே எல்லாவற்றையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே'' (1.தீமோ. 2:5,6) இப்படிப்பட்ட தெளிவான போதனையை விடுத்து இன்று அநேக மார்க்கப்பிரிவுகள் நூற்றுக்கணக்கான மனிதர்களை மத்தியஸ்தர்களாய் கருதுகின்றனர் ஏற்றுக்கொண்டுள்ளனர். சிலர் மரியாள் மூலம் ஜெபிக்கச் சொல்லுகின்றனர், வேறுசிலர் ''இல்லை முகம்மது மூலம் ஜெபியுங்கள்'' என்கின்றனர். இன்னும் சிலர் தீர்க்கதரிசிகள் அல்லது மனுஷர்கள் மூலம் ஜெபிக்கச் சொல்லுகின்றனர். நண்பரே இன்று தேவனை அணுக பூமிக்குரிய எந்த ஆசாரியனும் மத்தியஸ்தராய் இருப்பதில்லை.எனவே அவர் நியமித்தவரைக்கொண்டு அவர் மூலமாய் ஜெபியுங்கள் (எபி.4:14-16; கொலோ.3:17; யோவா.14:4).

தமிழில்:**E.A. ஆறுமுகம்.**

## நீதிமொழிகளில் புத்திமான்

1. தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான். 10:19;17:28
2. நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான். 14:29
3. புத்திமானுடைய மனம் அறிவை சம்பாதிக்கும். 15:14
4. புத்திமானுக்கு ஞானம் உண்டு. 10:23
5. புத்திமான் தன் நடக்கையைச் செம்மைப்படுத்துகிறான். 15:21



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00p.m.<br>9.00 - 9.15p.m. | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15p.m | Box : 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00pm<br>5.45 - 6.00pm<br>5.30 - 5.45pm | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00pm | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

**Designed by : Aarthi Computers,** 811-Brough Road, Erode-1. Ph : 260971

REGISTERED NEWS PAPER RNI No. 47661 / 87 - NEW DEL

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு
செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்
நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக
முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**